பக்கங்கள்: 25

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 மார்கழி 18 ஞாயிற்றுக்கிழமை 01.01.2023 கதிர் 57

### இனி இது ரகசியம் அல்ல!

தமிழர் தேசத்தின் தலையாய கட்சி என்று கூறப்படும் இலங்கைத்தமிழரசுக்கட்சியை – அதன் தலைமையை – எண்ணும் போது அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை.

ஒன்பது, பத்துப் பேர் ஒன்று கூடிய கட்சியின்

2

# திலீபனை யாழில் நினைவேந்தியமைக்காக சிவாஜிலிங்கத்துக்குக் கொழும்பில் வழக்கு

## பயங்கரவாதத் தடைச் சட்டம் பாயும் அறிகுறி

யாழ்ப்பாணம்,ஜன.02

தியாகி திலீபன் நினைவு தினத்தை அனுஸ்டித்தமை தொடர்பாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தை 2023 ஜனவரி மாதம் 11 ஆம் திகதி காலை 8 மணிக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்திற்கு சமூகமளிக்குமாறு நீதிமன்றக் கட்டளை வழங்கப்பட்டது.

நேற்று எம்.கே.சிவாஜிலிங்கத்தின் வீட்டிற்கு சென்ற வல்வெட்டித்துறைப் பொலிஸார் நீதிமன்ற கட்டளையை வழங்கினர்.

தியாகி திலீபனின் நினைவுதினத்தை

2







வாசகர்கள், விளம்பரதாரர்கள், முகவர்கள் அனைவருக்கும் 'காலைக்கதிர்' நாளிதழின் இனிய புதுவருட வாழ்த்துக்கள்.

## உள்ளூராட்சி தேர்தலுக்கு தயாராகின்றது ஈ.பி.டி.பி.!

யாழ்ப்பாணம்,ஜன.01



உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்பாளர் பட்டியலைத் தயார் செய்யும் பணியை ஈ.பி.டி.பி. கட்சி ஆரம்பித்துள்ளது.

உள்ளூராட்சி சபைகளிற்கான தேர்தல் அறிவிப்பு

24

# உள்ளூராட்சித் தேர்தல் அறிவிப்பு வியாழனன்று

## தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு விடுக்கும்

கொழும்பு,ஜனவரி 01

**உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பை தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு எதிர்வரும் 5ஆம் திகதி (வியாழக்கிழமை) வெளியிட உத்தேசித்துள்ளது.**

**இம்மாதத்தின் மூன்றாவது வார காலப்பகுதியில் வேட்பு மனுத்தாக்கல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை வெளியிட ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாக அறிய முடிகிறது. கலப்பு மற்றும் விகிதாசார முறைக்கு அமைய உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இடம்பெறும்.**

2

## ஐஸ் போதைப்பொருள் மன்னார் பஸ்ஸில் மீட்பு




தலைமன்னாரில் இருந்து நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் பயணிகளுடன் கொழும்பு நோக்கிப் பயணித்த அரச பஸ்ஸில் ஐஸ் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டது.

இரவு 8 மணியளவில் பேசாலை பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக பொலிஸார் பஸ்ஸை இடைநிறுத்தி சோதனைக்கு உட்படுத்தினர்.

இதன் போது பஸ்ஸின் பின் ஆசனத்தின் இருக்கையின் கீழ் காணப்பட்ட பொதி ஒன்றைப்

24

## குணபாலசிங்கம் நம்மைப் பிரிந்தார்



(ந.லோகதயாளன்)

வலி.வடக்கு மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு சங்கத்தின் தலைவர் அ. குணபாலசிங்கம் நேற்றுக் காலமானார்.

வலி.வடக்கில் இருந்து 1990-06-15 அன்று ஒட்டு

24

## மாகாணக் கல்வி பணிப்பாளராக இன்று முதல் யோன் குயின்ரஸ்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜன. 01

வடக்கு மாகாணத்தின் ஐந்தாவது மாகாணக் கல்வி பணிப்பாளராக ரி.யோன் குயின்ரஸ் நியமிக்கப்பட்டுள்ளார். வடமாகாண ஆளுநரால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு சென்ஜோசப் மற்றும் யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரி ஆகியவற்றின் பழைய

24

## மூன்றாவது மாதமாக பணவீக்கம் வீழ்ச்சி!

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம் நேற்று முடிவடைந்த வருடத்தில் மூன்றாவது முறையாக – டிசெம்பரிலும் – வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதற்கமைய பணவீக்கம் 57.2 சதவீதமாகவும், உணவு பணவீக்கம் 64.4 சதவீதமாகவும், உணவல்லாப் பணவீக்கம் 53.4 சதவீதமாகவும்

24




## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர்பீடமான அரசியல் குழுவின் கூட்டத்தில் ஒரு முடிவு எடுக்கப்பட்டதா, இல்லையா என்பது தொடர்பில் அக்கட்சியின் பிரமுகர்கள் பண்ணும் அலப்பறையைப் பார்த்தால் இது ஓர் அரசியல் கட்சிதானா என்று கேட்கத் தோன்றுகின்றது.

மாறி, மாறி ஒன்றுக்கு ஒன்று முரண்படும் அறிக்கைகளை விடுகின்றமையைப் பார்த்தால் இந்தக் கட்சி கடைசி வரை தேறாது என்றுதான் படுகின்றது. கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா அரசியலில் மூத்த பிரமுகர் என்கிறார்கள். ஆனால் விஜயகாந்த் மாதிரி நடந்து கொள்கிறார்.

கடைசியாக நடந்த அரசியல் குழு கூட்டத்தில் -

எதிர்வரும் உள்ளாட்சித் தேர்தலை, முன்னர் தமிழரசையும் கூட்டமைப்பையும் விட்டுப் பிரிந்து போனவர்களின் கட்சிகள், அமைப்புகளைச் சேர்த்து புதிய கூட்டமைப்பாக அணுகுவது என்ற யோசனைத் திட்டத்தை நிராகரிப்பது என்றும் -

தொடர்ந்தும் ரெலோ, புளொட், தமிழரசு ஆகியவற்றை மட்டும் உள்ளடக்கிய மூன்று கட்சிகளின் கூட்டமைப்பாகவே தேர்தலை எதிர்கொள்ள வேண்டும் என்றும் -

கட்சியின் மத்திய செயற்குழுவுக்கு கட்சியின் அரசியல் குழு பரிந்துரைக்கிறது என்று முடிவு செய்யப்பட்டதாக முதலில் அறிய வந்தது.

அது பற்றிய செய்தி முதலில் ஊடகங்களில் வெளியானது. பின்னர், அப்படி ஒரு முடிவு அரசியல் குழுக் கூட்டத்தில் எட்டப்பட்டதாக கூட்டமைப்பு பேச்சாளர் சுமந்திரனும் பகிரங்கமாக அறிவித்தார்.

இல்லை, இல்லை, அரசியல் குழுவில் அப்படி ஒரு முடிவு எடுக்கப்படவில்லை என்று மற்றொரு ஜனாதிபதி சட்டத்தரணியான கே.வி.தவராஜா அறிவித்தார்.

அதை ஆமோதிக்கும் விதத்தில், சுமந்திரன் வெளியிட்ட தகவல் தவறு என்ற சாரப்பட கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜாவின் பெயரில் அறிவித்தல் வெளியானது.

ஆக, அப்படி ஒரு பரிந்துரையை மத்திய குழுவுக்கு முன்வைப்பது என அன்றைய அரசியல் குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டதா என்று நோண்டினேன்.

கூட்டத்தில் பங்கு பற்றிய கட்சியின் பதில் பொதுச் செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கம், சிரேஷ்ட துணைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், சிரேஷ்ட துணை செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், நிர்வாகச் செயலாளர் குலநாயகம், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.ஶ்ரீதரன், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் ஆகிய அறுவருமே அப்படித்தான் முடிவு எடுக்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்தினர்.

கூட்டத்தில் பங்குபற்றிய திருகோணமலை மாவட்ட தமிழரசுத் தலைவர் குகதாசனுடன் தொடர்பு கொள்ள முடியவில்லை.

ஆறு பேருக்கு தீர்மானம் எடுத்ததாக தெரிகையில் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜாவுக்கும் சட்டத்தரணி தவராசாவுக்கும் மட்டும்தான் அப்படித் தெரியவில்லை.

சரி. அடுத்த சனிக்கிழமை மட்டக்களப்பில் நடைபெறும் கட்சியின் மத்திய குழுவிலாவது, இப்படி ஒரு தீர்மானம் அரசியல் குழு எடுத்ததா அல்லது இல்லையா என்று தீர்மானித்தால் நல்லதுதான் பாருங்கோ...!

- மின்னல் -

## திலீபனை யாழில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னிட்டு நீதிமன்றத் தடையை மீறி தீலிபனின் நினைவுதினத்தை அனுஷ்டித்த குற்றச்சாட்டின் கீழ் எம்.கே.சிவாஜிலிங்கம் கோண்டாவில் பகுதியில் அன்னங்கை ஒழுங்கையில் வைத்து 2020 செப்டம்பர்15ம்திகதிகைதுசெய்யப்பட்டார்.

நீதிமன்ற தடையுத்தரவை மீறியமை மற்றும் தடை செய்யப்பட்ட அமைப்பு ஒன்றின் உறுப்பினரை நினைவுகூர்ந்தமை உள்ளிட்ட குற்றசாட்டின் கீழ் யாழ். நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட எம். கே. சிவாஜிலிங்கத்தை மன்று எச்சரித்து 2 இலட்ச ரூபாய் கொண்ட சரீரப் பிணையில் விடுவித்திருந்தது.

பயங்கரவாததடைச்சட்டம்நீக்கப்படும் என இலங்கை அரசாங்கம் தெரிவித்தாலும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என எம்.கே சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பாக வல்வெட்டித்துறையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

திலீபனின் நினைவுதினத்தை அனுஸ்டித்தமை தொடர்பாக கைது செய்து 24 மணி நேரம் தடுத்துவைக்கப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, பயங்கரவாத தடைச்சட்டத்தை வழக்கில் புகுத்தக் கூடிய வகையிலே பொலிஸார் முயற்சிகள் எடுத்தமையை நான் அறிந்தேன்.

பின்னர் சாதாரண சட்டத்தின் கீழ் நான் முன்னிலைப்படுத்தப்பட்டேன். எது எப்படி இருந்தாலும் கடந்த ஆண்டு நடைபெற்ற விசாரணையின் போது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நாங்கள் இந்த வழக்கைத் தாக்கல் செய்ய யோசித்து இருக்கின்றோம், சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு இதன் கோவை அனுப்பப்பட்டு இருக்கின்றது என யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த அடிப்படையில் நேற்றைய தினம் எனது வீட்டிற்கு வந்த பொலிஸார் எனக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தின் நீதிமன்ற கட்டளையை வழங்கிச் சென்றனர்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற செயலுக்காக யாழ்ப்பாணத்தில் மேல் நீதிமன்றம் இருக்கத்தக்கதாக கொழும்பு மேல்நீதிமன்றத்தில்தாக்கல்செய்யப்பட்ட நோக்கம் என்ன? பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்தார்களா அல்லது பயங்கரவாத தடைச் சட்டத்தை ஒத்ததாக புலிகளின் மீளுருவாக்கம் போன்ற குற்றச்சாட்டுகளை சுமத்தப்பட்டிருக்கின்றதா என்பவை குற்றப்பத்திரிகை வழங்கிய பின்னரே தெரியும். பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படும் என கூறப்படும் போது இவ்வாறான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளன. – என்றார்.

## உள்ளூராட்சித் தேர்தல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எதிர் வரும் பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 11 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் நடத்த தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு உத்தேசித்துள்ளதாக அறிய முடிகிறது. இம்முறை இரண்டு இலட்சம் பேர் புதிதாக வாக்களிக்க தகுதிப் பெற்றுள்ளார்கள்.

நகர மற்றும் பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் கடந்த ஆண்டு மார்ச் மாதம் நடத்த வேண்டிய உள்ளூராட்சி மன்ற சபைத் தேர்தலை முன்னாள் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் அமைச்சின் விடயதான அதிகாரங்களுக்கு அமைய இவ்வருடம் மார்ச் மாதம் வரை பிற்போட்டார்.

(24ஆம் பக்கம் பார்க்க)









# இருள் மறையும் வெற்றிக்கான பாதையை தெளிவுபடுத்தும் தீர்க்கமான வெற்றிகரமான ஆண்டாக 2023 அமையட்டும்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வாழ்த்து



பாரிய நெருக்கடிகளை சந்தித்தும் பல நெருக்கடிகள் இன்னும் முடிவடையாத நிலையிலும் 2023 ஆம் ஆண்டு மலர்ந்துள்ளது. இருள் மறையும் வெற்றிக்கான பாதையை தெளிவுபடுத்தும் தீர்க்கமான மற்றும் வெற்றிகரமான ஆண்டாக இந்த ஆண்டு அமைய பிரார்த்திப்போம்.

இவ்வாறு தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

அவரது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு –

ஒரு நாடாக கடந்த வருடம் முழுவதும் கேட்ட மற்றும் எதிர்கொண்ட பல செய்திகள் நல்லதை விட கெட்டவையாகவே இருந்தன. தூர நோக்கு இல்லாத ஆட்சி முறையால் இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக வங்குரோத்து நிலைமைக்கு ஆளாகிய படுமோசமான ஆண்டாகவும், இந்த நாட்டில் பொதுமக்களின் தீர்க்கமான வெற்றி எழுச்சிக்கான தனித்துவமான ஆண்டாகவும் 2022 ஆம் ஆண்டைக் குறிப்பிட முடியும். இந்த உன்னத எழுச்சிக்கு நாமும் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்போம்.

ஒரு நாடாக, நாம் பல சவால்களுடன் 2023 ஆம் ஆண்டை எதிர்கொள்கிறோம்.

நாட்டின் தற்போதைய ஆட்சியை மீட்சியாக மாற்றுவதற்கான முன்னணி நடவடிக்கைகள் இந்த வருடத்துக்குள் எடுக்கப்பட வேண்டும் என நாங்கள் உறுதியாக நம்புகின்றோம். தோல்வியடைந்த ஆட்சியின் துன்பத்தை இந்நாட்டு மக்கள் இனியும் அனுபவிக்க முடியாது என்பதே யதார்த்தம்.

எனவே, நாட்டைப் புதியபாதையில்கொண்டு செல்லக் கூடிய மற்றும் கொண்டு செல்ல வேண்டிய வேலைத்திட்டங்கள் பற்றி புதிதாக நாம் சிந்திக்க வேண்டும். ஒரு நாட்டின் உந்து சக்தி மக்களின் இறையாண்மை என்பதை மீண்டும் ஒருமுறை நினைவு கூர்ந்து அனைத்து இலங்கைப் பிரஜைகளுக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். – என்றுள்ளது.









# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மாறும் சட்ட வியாக்கியானம்

சட்டங்கள் பெரும்பாலும் மாறுவதில்லை. ஆட்சியாளர்கள்தான் அவ்வப்போது மாறுகின்றனர்.

ஆட்சியாளர்கள் மாறும்போது இருக்கின்ற சட்டங்களின் வியாக்கியானங்களும் தம்பாட்டில் மாறுகின்ற புதுமை இந்த இலங்கை தீவில்தான் நிஜம்.

உயிரிழந்த உறவுகளுக்காக – இனத்துக்கென மரணித்தோருக்காக – விளக்கேற்றுவது மஹிந்த ஜனாதிபதியாக இருந்த போதும் குற்றம். மைத்திரி ஜனாதிபதியானதும் சட்டங்கள் மாறாவிட்டாலும் சட்ட வியாக்கியானங்கள், விளக்கங்கள் மாற, நினைவேந்தல் செய்வது மக்களின் உரிமை என்றாயிற்று.

மீண்டும் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியானதும் உறவுகளுக்காக விளக்கேற்றுவது மகா குற்றம் என முடிவாயிற்று.

அந்தக் கொடூரக் கெடுபிடிப் போக்கை தமிழர் தேசமீது கட்டவிழ்த்து நின்று, அடாவடி பண்ணிய கோட்டாபய ராஜபக்ஷ தென்னிலங்கை மக்களுக்கு அஞ்சி நாட்டை விட்டு ஓட்டம் பிடித்தபோது ரணில் அதிகாரத்துக்கு ஏறினார்.

அவரது ஆட்சியிலே நினைவேந்தல் செய்யும் உரிமையை அங்கீகரிப்பது போன்ற தோற்றம் ஏற்படுத்தப்பட்டமையை கடந்து சென்ற மாவீரர் வாரத்தில் கண்டோம். ஆயுதப் போராட்டத்தில் வீர மரணம் அடைந்த மாவீரர்களுக்கு கூட மக்கள் ஒன்று கூடி அஞ்சலித்து, விளக்கேற்றி நினைவு கூர்ந்தார்கள்.

இடையில் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது யாழ்ப்பாணத்தில் விளக்கேற்றி அஞ்சலித்தார் என்ற குற்றச்சாட்டில், இப்போது அரசியல் பிரமுகர் சிவாஜிலிங்கத்துக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பி இருக்கிறது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான வழக்கா இது என்பது இனித்தான் தெரியவரும். பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழான வழக்கு என்று தியாகி திலீபனுக்கு விளக்கேற்றிய குற்றத்திற்காக சிவாஜிலிங்கம் பிணை வழங்கப்படாமல் தடுப்பு காவலில் தடுத்து வைக்கப்பட நேர்ந்தாலும் நேரலாம்.

நீதிமன்ற தடை உத்தரவை மீறி, திலீபனை நினைத்து, அவரை நினைவு நாளில் விளக்கேற்றினார் என்பதுதான் சிவாஜிலிங்கம் மீதான குற்றச்சாட்டு.

சட்டங்கள் ஏதும் இடையில் மாறவில்லை. ஆனால் காந்திய வழியில் – அறப் பாதையில் – அஹிம்சை மார்க்கத்தில் – போராடி தன்னுயிரை இனத்துக்காக ஈந்த திலீபனுக்கு விளக்கேற்ற அப்போது தடை விதித்த அதே நீதிமன்றம், இப்போது இரண்டு ஆண்டுகள் கழித்து, மாவீரர் தினத்தில், மாவீரர் துயிலும் இல்லங்கள் எங்கும் மக்கள் ஆயிரக் கணக்கில் கூடி மாவீரர்களை நினைவு கூர்வதைப் பார்த்திருந்தது என்பதுதான் இங்கு வியப்புக்குரிய விடயம்.

ஆட்சியாளர்களின் கருத்துக்கேற்ப சட்டத்தின் வியாக்கியானத்தை மாற்றும் விதத்திலான நீதித்துறையை வெறுமனே பார்த்திருப்பது நீதிமன்றங்களுக்கு இழுக்கு.

நடவடிக்கை எடுக்க வேண்டியது சிவாஜிலிங்கத்துக்கு எதிராக அல்ல. காலத்துக்கு காலம் சட்ட வியாக்கியானத்தை மாற்றும் சட்டத்துறையினருக்கு – குறிப்பாக சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் பொலிஸ் துறை போன்றவற்றுக்கு எதிராகத்தான்...!

## நிலக்கரி கொள்வனவில் மோசடி:
# எனது கூற்று உண்மையெனில் காஞ்சன பதவி விலகவேண்டும்!

ஓமல்பே சோபித தேரர் சவால்



நிலக்கரி கொள்வனவு மோசடி தொடர்பில் நான் முன்வைத்த குற்றச்சாட்டு பொய் என்றால் தண்டனை ஏற்கத் தயார். குற்றச்சாட்டு உண்மையாயின் மின்சாரத்துறை மற்றும் வலுசக்தி துறை அமைச்சர் காஞ்சன விஜேசேகர பதவி விலக வேண்டும் என மக்கள் பேரவை அமைப்பின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள மக்கள் பேரவை காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

நிலக்கரி விலைமனு கோரல் தொடர்பில் நான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ததால் நிலக்கரி கொள்வனவில் தாமதம் ஏற்பட்டு மின்னுற்பத்தி கட்டமைப்பு பாதிக்கப்பட்டுள்ளதாக மின்சாரத்துறை அமைச்சர் குறிப்பிட்டுள்ளமை முற்றிலும் அடிப்படையற்றது.

நிலக்கரி விலைமனுக்கோரல் ஊடாக பாரிய நிதி மோசடி இடம்பெற இருந்தது, நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ததைத் தொடர்ந்து மின்சாரத்துறை அமைச்சர் நிலக்கரி தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுக்கோரலை கடந்த நவம்பர் மாதம் 25 ஆம் திகதி மீள ஏன் பெற்றுக்கொண்டார்.

நாடு வங்குரோத்து நிலை அடைந்துள்ள பின்னணியிலும் அரச நிதி மோசடிகளுக்கு குறையேதும் இல்லை. நிலக்கரி கொள்வனவில் இடம்பெற்ற மோசடி தொடர்பில் ஜனாதிபதி விசாரணை குழு ஒன்றை நியமிக்குமாறு வலியுறுத்தியுள்ளேன்.

நிலக்கரி கொள்வனவு மோசடி தொடர்பில் நான் முன்வைத்த குற்றச்சாட்டு பொய் என்றால் தண்டனை ஏற்கத் தயார், குற்றச்சாட்டு உண்மையாயின் மின்சாரத்துறை மற்றும் வலுசக்தி துறை அமைச்சர் காஞ்சன விஜேசேகர பதவி விலக வேண்டும். – என்றார்.

# அரசாங்கப் பாடசாலைகளில் புதிய வருடத்தில் புதிய திட்டம்!

பிரதி புதன்கிழமை 10 நிமிடங்கள் மாணவர் விழிப்புணர்வு செயற்திட்டம்

(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கையில் உள்ள சகல அரச பாடசாலைகளிலும் புது வருடத்தில் இருந்து பிரதி புதன்கிழமைகளில் காலை 10 நிமிடங்கள் மாணவர் விழிப்புணர்வு செயல்திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட உள்ளது .

இது தொடர்பான சுற்றுநிருபத்தை கல்வி அமைச்சு சகல மாகாண வலய கல்வி பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

முதல் 12 புதன்கிழமைகளில் காலை 7.30 மணிமுதல் 7.40 மணி வரை இந்தப் புதிய விழிப்புணர்வு செயற்திட்டம் அமுலாக்கப்படவுள்ளது. அதன்படி எதிர்வரும் ஜனவரி 4 ஆம் திகதி புதன்கிழமை முதலாவது நாள் திட்டம் அறிமுகமாகவுள்ளது.

நாளை மறுதினம் இரண்டாம் திகதி திங்கட்கிழமை பாடசாலை மூன்றாம் தவணைக்காக ஆரம்பமாகின்றது என்பது தெரிந்ததே.

ஆக பத்து நிமிடங்களைக் கொண்டதாக 'நிலையான தன்மையில் அமர்த்தல்' என்ற தொனிப் பொருளில் இந்த வேலைத்திட்டம் 12 புதன்கிழமைகளுக்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

மாணவர்களின் விழுமியங்கள் மற்றும் பண்புசார் விருத்தி தொடர்பாக இந்தப் புதிய விழிப்புணர்வு செயற்திட்டம் அமுல்படுத்தப்பட இருக்கின்றது .

நிலையான தன்மையில் அமரச் செய்தல் என்ற இந் நிகழ்வில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

இதனை சர்வ மத குழுக்கள் கண்காணிக்க இருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலை புதிய அதிபராக லலீசன் நியமனம்!



யாழ்ப்பாணம், ஜன. 01

கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலையின் புதிய அதிபராக இன்று (2023 ஜனவரி முதலாம் திகதி) முதல் சந்திரமௌலீசன் லலீசன் கல்வியமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கலாசாலையின் அதிபராகக் கடமையாற்றிய ச.கருணைலிங்கம் 2022 டிசெம்பர் 31 ஆம் திகதி ஓய்வுபெற்றுச் சென்றுள்ளார்.

பிரதி அதிபராகக் கடமையாற்றிய சந்திர மௌலீசன் லலீசன் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# சுகாதார பழக்கவழக்கங்களை முன்னரைவிட சிறப்பாக பின்பற்ற வேண்டும் என வலியுறுத்து!

## ஹேமந்த ஹேரத் தெரிவிப்பு



நாட்டில் இதுவரை பின்பற்றப்பட்ட சுகாதாரப் பழக்க வழக்கங்களை முன்னரை விடவும் சிறப்பாக பின்பற்ற வேண்டும் என சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

உலகின் பல நாடுகளில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், இலங்கையும் இந்த விடயம் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

கொரோனா தொற்று தற்போது ஒரு பாரதூரமான பிரச்சினையாகத் தோன்றவில்லை என்றாலும், அது முடிவுக்கு வராததால் கொரோனா மீண்டும் தலைதூக்கும் அபாயங்கள் இருக்கின்றன எனவும் அவர் எச்சரித்துள்ளார்.


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
conditions apply*
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555


northway
Family Mart
Save Money Live Better
அனைவருக்கும் இனிய புதுவருட
நல்வாழ்த்துக்கள்
077 787 8708, 021 222 6002,
077 764 7645
இல.184, பரமேஸ்வராச்சந்தி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
உப்புமடம் சந்தி,
கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

# தேவ அன்னையின் முழுப்பாதுகாப்பில் நம்பிக்கைவைத்து 2023 ஐ தொடங்குக

## யாழ்.ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை வாழ்த்து



2023 ஆவது புதிய ஆண்டு மலருகின்ற வேளை இந்தப் புத்தாண்டைக் கொண்டாடும் அனைவருக்கும் நீங்கள் உலகின் எப்பாகத்தில் இருந்தாலும் இப்புதிய ஆண்டு உங்கள் உள்ளத்து எண்ணங்கள், ஏக்கங்கள் அனைத்தையும் நிறைவு செய்யும் இறை ஆசீர் மிக்க ஆண்டாக அமைய முதலில் வாழ்த்துகிறோம்.

உலகக் கத்தோலிக்க திரு அவை ஒவ்வொரு ஆண்டின் முதல் தினத்தையும் தேவ அன்னையின் தினமாகப் பிரகடனப்படுத்தி அன்றைய தினத்தில் அந்த புதிய ஆண்டு முழுவதிற்குமான தேவ அன்னையின் தாய்க்குரிய அன்பையும் பாசமிகு பராமரிப்பையும் வல்லமை மிக்க இறை பாதுகாப்பையும் பெற செபிக்கும்படி பணித்து நிற்கிறது.

– இவ்வாறு தனது புத்தாண்டு வாழ்த்தில் தெரிவித்துள்ளார் யாழ்.ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை.

அவரது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

நான் ஆண்டவரின் அடிமை உமது சொற்படியே எனக்கு நிகழட்டும் (லூக்கா1:38) என்று தேவ அன்னை இறை சித்தத்தை ஏற்று பல இன்ப துன்ப அனுபவங்கள் வழி தன் அர்ப்பண வாழ்வை வாழ்ந்து இறைவனின் தாயாகவும் இறை மக்களின் தாயாகவும் விளங்கும் பாக்கியம் பெற்றவர். இன்று உலக மக்கள் அனைவரையும் தன் அன்பு மக்களாக அரவணைத்துப் பாதுகாத்துப் பாரமரித்து வருகிறாள்.

கடந்த 2022 ஆம் ஆண்டு ஆண்டு பல இன்பமான அனுபவங்கள் வழியும், பல துன்பமான அனுபவங்கள் வழியும் எம்மை அழைத்துச் சென்று தன் பயணத்தை முடித்து எம்மை விட்டுக் கடந்து சென்று விட்டது.

மலர்கின்ற 2023 ஆம் புதிய ஆண்டு எப்படி அமையுமோ என்ற ஏக்கமும், இனியதாய் அமைய வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் எம் எல்லோர் மனதுகளிலும் நிறையவே உண்டு. 2023 ஆம் ஆண்டை தேவ அன்னையின் பாதுகாப்பில் நம்பிக்கை வைத்து தொடங்குங்கள். இந்தப் புதிய ஆண்டு முழுவதும் தேவ அன்னை தன் தாய்க்குரிய அன்போடும் பாசத்தோடும் எம்மைப் பாதுகாப்பாள் என்ற நம்பிக்கை உங்கள் மனதில் நிறைந்திருக்கட்டும்.

தேவ தாயை எப்போதும் எங்கிருந்தாலும் என்ன நடந்தாலும் உங்கள் அன்னையாக மனதிலிருத்தி என்ன செய்தாலும் அன்னையின் துணையுடன் செய்யுங்கள். அன்னை வெற்றியையே பெற்றுத் தருவாள்.

இந்த ஆண்டு முழுவதும் என்ன நடந்தாலும் நான் ஆண்டவரின் அடிமை உமது சொற்படியே எனக்கு நிகழட்டும் என மனதில் அடிக்கடி சொல்லிச் செபியுங்கள். இந்த வார்த்தைகளே இந்த ஆண்டு முழுவதும் உங்கள் அனைவரையும் வழிநடத்தும் வார்த்தைகளாகட்டும்.


இறைவனின் அன்னையும், இறை மக்களின் அன்னையுமான தேவ அன்னை தாய்க்குரிய அன்போடு எம் அனைவரையும் இவ்வாண்டு முழுவதும் எத்தீங்குமின்றி பாதுகாத்து, வழிநடத்தி, எம் அனைத்துத் தேவைகளிலும் உடனிருந்து நிறைவு செய்ய, இறையாசீர் மிக்க வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம்.

– என்றுள்ளது.









# 2023 ஆம் ஆண்டிலாவது பிச்சையெடுப்பதை நிறுத்து!

**புத்தாண்டு செய்தியில் கொழும்பு பேராயர் கர்தினால் தெரிவிப்பு**

2023 ஆம் ஆண்டிலாவது உலக நாடுகளிடம் கையேந்தாத நிலைக்கு இலங்கை வளர்ச்சியடைய வேண்டும் என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

அதற்காக நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான புதிய கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

புதிய கட்டமைப்பை உருவாக்கத் தவறினால் நாடு அழிந்துவிடும் என்றும் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை எச்சரித்துள்ளார்.

இலங்கையுடன் சுதந்திரம் பெற்ற பல நாடுகள் முன்னேறியுள்ள போதும் இலங்கை ஒரு ஏழை நாடு என்ற பிம்பத்தைப் பெற்றுள்ளது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கு காலங்காலமாக தேசத்தை ஆட்சி செய்தவர்கள் எடுக்கும் தவறான முடிவுகளே காரணம் என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

ஆகவே புதிய ஆண்டில் தேசத்தின் நலனுக்காக அனைத்து பிரஜைகளும் வேறுபாடுகளை மறந்து ஒன்றிணைய வேண்டும் என கொழும்பு பேராயர் கேட்டுக்கொண்டுள்ளார்.













English Classes
K.Ganash (BA.Pera)
Spoken English With Grammar
யாழ் நாகரில் தனி வகுப்பு
G.C.E O/L, A/L, பட்டதாரிகள்
தொழில் புரிபவர்,
ஆர்வமுள்ளவர்களுக்கு
G.C.E.O/L Literature
077 766 8725


Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park Npcpark northernpcpark Northern PC Park


அனைவருக்கும் இனிய புதுவருட நல்வாழ்த்துக்கள்
SAM LANKA
SAM LANKA
Direct Importers & Distributors
அனைத்து வகையான
LED பொருள்கள்
பாதுகாப்புச் சென்சார்கள்,
சி.சி.ரி.வி.கமராக்கள்,
மின் பாகங்கள், மின் கருவிகள்
அனைத்தும் எம்மிடம்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
இல.367, நாவலர் வீதி,
இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம்.
infosamlanka@gmail.com
021 222 1002,
0777 456 848,
0778 209 424


Jaffna GLASS HOUSE
Dealers Window Glasses
Tempered Glasses
Sheet Glasses
Partition Fitting
Mirror, Plywood
Hardware Items
Aluminium Fitting
Specialist in Tempered Glasses & Glass Edging
No. 311, K.K.S. Road, Jaffna.
071 276 9189


கிருபா லேணர்ஸ்
කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS
அரச அங்கிகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.
அ.கிருபாகரன் -அதிபர்-
குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
அசோக் லேலண்ட் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
மும்மொழியிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
தவணைமுறைக் கட்டணங்கள்.
இரவிலும் வாகன பயிற்சிகள்.
NP L 2222
தலைமையகம்
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353 / 0777 22 5292
kirubalearners@gmail.com
சுன்னாகம் 021 224 2022
நெல்லியடி 021 226 0700
பருத்தித்துறை 021 226 1100
ஆவரங்கால் 021 222 6688
சித்தங்கேணி 021 225 2500
சாவகச்சேரி 021 227 0700
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544

காலைக்கதிர் Kalaikkathir

# பிறக்கும் வருடம் சிறக்க மனத்தால் இறையை வேண்டிடுவோம் !

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா

பிறக்கும் வருடம் சிறக்க
மனத்தால் இறையை வேண்டிடுவோம்
அடக்கும் ஆணவம் அகல
அகத்தால் இறையை வேண்டிடுவோம்

தொடக்கும் காரியம் துலங்க
துதித்தே இறையை வேண்டிடுவோம்
நலமும் வளமும் பெருக
நாளும் இறையை நாடிடுவோம்

உற்றார் உறவின் இணக்கம்
உயர்வாய் இருக்க வேண்டிடுவோம்
கற்றார் பெருக நாட்டில்
கருதி இறையை வேண்டிடுவோம்

பசியும் பிணியும் அகல
பாங்காய் இறையை வேண்டிடுவோம்
அறிவும் தெளிவும் பிறக்க
அன்பாய் இறையை வேண்டிடுவோம்

போரின் எண்ணம் தொலைய
பொறுப்பாய் இறையை வேண்டிடுவோம்
வாதம் புரியும் கூட்டம்
மறைய இறையை வேண்டிடுவோம்

ஏழை என்னும் சொல்லை
இகத்தில் அகற்ற வேண்டிடுவோம்
கோழை என்னும் சொல்லை
குவலயம் அகல வேண்டிடுவோம்

வேலை இல்லை என்னும்
வேதனை போக்க வேண்டிடுவோம்

இருக்கும் தொழிலை நன்றாய்
பெருக்க இறையை வேண்டிடுவோம்

நல்ல தலைமை எழுந்து
நாட்டை ஆள வேண்டிடுவோம்
சொல்லும் சொல்லை காக்க
தூய தலைமை வேண்டிடுவோம்

கொள்ளை அடிக்கும் தலைமை
குழியுள் விழ வேண்டிடுவோம்
வல்ல தலைமை நாட்டில்
வளர இறையை வேண்டிடுவோம்

பொய்மை உரைக்கும் கூட்டம்
பொசுங்க இறையை வேண்டிடுவோம்
வாய்மை என்னும் வசந்தம்
வாய்க்க இறையை வேண்டிடுவோம்

தாய்மை போற்றும் எண்ணம்
தளரா இருக்க வேண்டிடுவோம்
காய்தல் உவத்தல் இன்றி
கருணை பெருக வேண்டிடுவோம்

அன்பு அறன் வாழ்வில்
அமைய அனைவரும் வேண்டிடுவோம்
அதர்மம் அசுத்தம் வாழ்வில்
அகல அனைவரும் வேண்டிடுவோம்

துன்பம் துயரம் போக
என்று மிறையை வேண்டிடுவோம்
குன்றா மகிழ்வே நிறைய
நன்றாய் இறையை வேண்டிடுவோம்








கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்

# Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





**FULL OPTION**

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

# தீர்வு தரும் தீர்க்கமான ஆண்டாக புதிய 2023 ஆம் ஆண்டு மலரட்டும்!

## அமைச்சர் டக்ளஸ் வாழ்த்து



தமிழ் மக்கள் சுமந்து நிற்கும் தீராப் பிரச்சினைகளுக்குதீர்வுகளைப்பெற்றுக் கொடுக்கும் தீர்க்கமான ஆண்டாக புதிய ஆண்டு மலரட்டும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள புதுவருடச் செய்தியில் தெரிவித்துள்ளார். அவர் மேலும் அந்தச் செய்தியில் தெரித்திருப்பவை வருமாறு –

மக்களை தோற்கடித்து அதில் சுயலாப அரசியல் செய்வோர் இன்னும் மாறவே இல்லை. ஒற்றுமைஎன்கிறார்கள் அக்கணமே உள் முரண்பாடுகள் என்கிறார்கள், மக்களை மறந்து மறுகணமே மத்தியஸ்தம் என்றும் மாற்றுத் திட்டம் என்றும் புலம்பித் தள்ளுகிறார்கள்.

அவர்களை இனியும் நம்பினால் தமிழ் மக்களுக்கு நன்மை ஏதும் நடந்தேறாது என்பது மீண்டும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

தமக்கான அரசியல் இலாபம் தவிர தமிழ் மக்களுக்குத் தொடர் தோல்விகளை மட்டுமே பரிசளிக்கும் அவ்வழியை மறந்து, பிறக்கும் புத்தாண்டிலாவது நடைமுறைச் சாத்தியம் எனும் நல் வழி நடந்திட தமிழ் மக்கள் உறுதி ஏற்றிட வேண்டும்.

பொருளாதார நெருக்கடிகளுக்கும், வேரோடிவிட்ட அரசியல் பிரச்சினைக்கும் நிலையான தீர்வொன்றை கண்டுவிட வேண்டுமென்ற தீர்மானம் ஏற்றிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் விருப்பமும் முயற்சிகளும் நாட்டுக்கு விடிவொன்றைக் கண்டு தரும் என்று நம்புவோம்.

பல தசாப்த கால பிரச்சினையான தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வொன்றைத் தருவதென்பது இலகுவான காரியமல்ல. அதற்கு ஜனாதிபதி தென் இலங்கையில் பல தடைகளை கடக்கும் பலம்பெற வேண்டும். அதற்கு தமிழ் மக்களும் தமது நேசக் கரம் நீட்டி புதிய நம்பிக்கையை வெளிப்படுத்த வேண்டும்.

இத்தகைய தீர்க்கமான காலச்சூழலில் ஆரம்பமாகும் புதிய வருடம் தீர்வுகளைத் தரும் ஆண்டாக அமைய வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பும் விருப்பமுமாகும். – என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.









# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir

Page I English for all Sunday the 01st of January 2023

We welcome students' articles in word for publication
-Editor-
kalaikkathiredu@gmail.com

## Read the following passage and Answer: the question that follows.

I lay in sorrow, in deep distress;
My grief a proud man heard;
His looks were cold, he gave me gold,
But not a kindly word
My sorrow passed – I paid him back
The gold he gave to me;
Then stood erect and spoke my thanks
And blessed his charity.

I lay in want, and grief and pain;
A poor man passed my way,
He bound my head, he gave me bread,
He watched me night and day.
How shall I pay him back again
For all he did to me?
Oh, gold is great, but greater far
Is heavenly sympathy.

1. How did the proud man help the poet when he was in deep distress'?

(a) He gave him jewels (b) He took him home
(c) He gave some money (d) He pitied the poet

2. What was it he did not give the poet?

(a) money (b) gold
(c) food (d) sympathy.

3. How did the poor man take care of the poet?

(a) The poor man gave him some money and food
(b) The poor man gave gold and kind words
(c) The poor man gave food to the poet and took care of him day and night
(d) He took the poet home and bound his head which was hurt

4. Which of the following statements is not true?

(a) The poet repaid his debt to the proud man by thanking him
(b) The poor man blessed the charity of the poet
(c) When the poet was in sorrow he was given money
(d) The poet says he cannot repay the poor man for his sympathy

5. Which word in the poem means "giving money to a person who is in need"?

(a) charity (b) sympathy
(c) kindness (d) distress



From Rameswaram to the Rashtrapati Bhavan, it's been a long journey. Taking to Nona Walia on the eve of Teacher's Day, President Dr. A.P.J. Abdul Kalam talks about life's toughest lessons learnt and his mission be ing a teacher to the Indian youth. "A proper education would help nurture a sense of dignity and self–respect among our youth," says President Kalam. There's still a child in him though, and he's still curious about learning new things. Life's a mission for President Kalam. Nonetheless, he remembers his first lesson in life and how it changed his destiny.

"I was studying in Standard V and must have been all of 10. My teacher, Sri Sivasubramania Iyer was telling how birds fly. He drew a diagram of a bird on the blackboard, depicting the wings, tail and the body with the head and then explained how birds soar to the sky. At the end of the class, I said I didn't understand. Then he asked the other students if they had understood, but nobody had understood how birds fly," he recalls.

"That evening, the entire class was taken to Rameshwaram shore," the President continues, "My teacher showed us sea birds. We saw marvellous formations of them flying and how their wings flapped. Then my teacher asked us, 'Where is the bird's engine and how is it powered?' I knew then that birds are powered by their own life and motivation. I understood all about birds' dynamics."

***Answer the following questions based on the reading passage.***

1. When did Nona Walia talk to the President Dr. A. P.J. Abdul Kalam?

........................................................................................................

2. What did the teacher draw on the blackboard?

........................................................................................................

3. What did Dr. A.P.J. Abdul Kalam learn when the entire class was taken to the Rameswaram shore?

........................................................................................................

4. (a) Give the antonyms of:
   (i) remembers
   (ii) toughest.
   (b) Which words in the passage mean the following
   (i) fate
   (ii) forces that produce movement.

5. What inspiration do you gain after reading about Dr. Kalam's experiences as a student?

........................................................................................................



"konwledge isn't free. You have to pay attention"

***Weavers, weaving at break of day,***
***Why do you weave a garment so gay?***
***Blue as the wing of a bluebird wild,***
***We weave the robes of a new–born child.***
***Weavers, weaving at fall of night,***
***Why do you weave a garment so bright?***

***Like the plumes of a peacock, purple and green,***
***We weave the marriage–veils of a queen.***
***Weavers, weaving solemn and still,***
***What do you weave in the moonlight chill?***
***White as a feather and white as a cloud,***
***We weave a dead man's funeral shroud.***

1. What do the weavers weave in the early morning?
(a) a bright blue cloth (b) a dull grey cloth
(c) a soft white cloth (d) a red coloured veil

2. The ______ is purple and green coloured. .
(a) dress of the weavers
(b) dress of a newborn child
(c) the queen's marriage veil
(d) the robe of a king

3. Whom does the poet address in the poem?
(a) weavers (b) children
(c) queens (d) all the above

4. What do the weavers weave in the chilly moonlight?
(a) a garment light as a feather
(b) a garment meant to cover a dead man
(c) a garment to keep away the chill
(d) a garment to wrap a newborn child in

5. The three stages of life mentioned in the poem are
(a) infancy, childhood and senility
(b) infancy, youth and death
(c) infancy, adolescence, middle age
(d) childhood, adulthood and senility

People moan about poverty as a great evil and it seems to be an accepted belief that if people had plenty of money, they would be happy, and get more out of life. As a rule there is more genuine satisfaction in life and more is obtained from life in the humble cottage of the poor man than in the palace of rich men, who are attended by servants and governesses at a later stage. At the same time I am glad to think they do not know what they have missed.

It is because I know how sweet and happy and pure the home of honest poverty is, how free from perplexing care and social envies and jealousies, how loving and united the members are in the common interest of supporting the family that I sympathies with the rich man's boy and congratulate the poor man's son. It is for these reasons that from the ranks of the poor so many strong eminent self–reliant men have sprung. If you read the list of the "Immortals who were not born to die" you will find that most of them have been poor.

***Answer the following questions based on the reading passage.***




1. What is the popular notion about poverty?
..........
2. Where can one get more genuine satisfaction in life?
..........
3. Why does the author pity the rich man's.boy?
..........
4. Find two other words in the passage with similar meanings to 'confusing and self–dependent.
..........
5. How has the author compared rich with the poor? What is his conclusion?
..........


Answer:
1. The popular notion about poverty is that it is a great evil.
2. One can get more genuine satisfaction in life in the humble cottage of the poor man.
3. The author pities the rich man's boy because he does not know the sweetness, happiness and purity of honest poverty.
4. The word 'perplexed' means 'confusing' and the word 'self–reliant' means self–dependent.
5. The author feels that more genuine satisfaction is obtained from life in the humble cottage of the poor man than in the palace of rich men who are attended by servants and governesses. He knows first hand how sweet and happy and pure the home of honest poverty is. The poor man is free from social envies. The members of a poor family are united, loving and share a common interest in being supportive to each other. The rich boy does not know these pleasures.

You may have heard of 3–D movies. You may have even seen one. The D in 3–D stands for dimensional. A dimension is a direction that something can be measured. Flat things can be measured in two ways. They can be measured by length and by width. That's why flat things are sometimes called 2–D or two–dimensional. Three–dimensional things can be measured in three ways. They can be measured by length and width like flat things. They can also be measured by their height. Height is what lets them come up off the paper or the screen. Three–dimensional shapes in math are called solids. Let's look at some of the most common solids.


A cube has six square sides. The sides are called faces




A rectangular prism has six sides that are all shaped like rectangles.



A sphere is shaped like Earth. It is also like a playground ball.



A square pyramid has a square on the bottom, and four triangle-shaped sides.



Answer the following questions based on the reading passage.
1. What is a dimension?
..........
2. How can flat, two–dimensional things be measured?
..........
3. What are three–dimensional shapes called in math?
..........
4. What shape are the sides of a cube?
..........
5. What does a sphere look like?



..........

Answer:
1. The direction something can be measured
2. length and Width
3. solids
4. Squares
5. like the earth or a ball

# The dark side of workplace recognition




Relationships are vital to our well-being and a life well-lived. Multiple longitudinal studies have shown the central role human connection plays in our health, happiness, and resilience. That's not just true of our partners, friends, and families either. Research conducted by Aaron Hurst, founder of Imperative, suggests that relationships are the key driver of fulfillment at work.

One way we can build and reinforce those relationships is through recognition. Just imagine how uplifting it feels to have a partner appreciate your sense of humor or a supervisor offer praise for a job well done. And such thankfulness can be as pleasant to give as it is to receive. In fact, simply witnessing people express gratitude makes those people more appealing to be around.

"This is a universal trait," businessman and philanthropist David Novak said in an interview. "One of the things that I've learned building a global company is that people all around the world are craving recognition. They want to be recognized for what they do. They want to know they count; they want to know they're appreciated."

But as is so often the case, these psychological highs can be double-edged. Our innate drive to acquire recognition makes it as powerful a manipulator as a motivator. That reality can lead us to unhealthy personal choices, and on a large enough scale, injurious workplace cultures.

### Workplace recognition isn't (necessarily) appreciation

While recognition and appreciation are often used interchangeably, they are not synonyms. That may seem like splitting hairs, but as Mike Robbins, consultant and author of Bring Your Whole Self to Work, points out, the difference is consequential.

Recognition is praise for results and performance. In the workplace, it often means an economic appraisal of one's worth to the company that can be enumerated and charted on a graph. The outcome: the attaboys and attagirls received for staying late to reach a deadline or nailing that performance review.

Conversely, appreciation acknowledges a person's inherent value. It doesn't consider someone's worth to the company coffers but reveres what that person brings to the culture and community.

"In simple terms, recognition is about what people do; appreciation is about who they are," Robbins writes for the Harvard Business Review.

According to Robbins, this leads to many problems with performance-based recognition, but we'll focus on two here: It's conditionality and scarcity. It's scarce because there are only so many bonuses, performance reviews, and opportunities to go around. It's conditional because such recognition stems from past circumstances, and future recognition can only be achieved by bringing more to the company. This leads people to enter a productivity arms race with their coworkers and past selves, an ever-escalating bid to increase their value and net that approval.

Of course, recognition can encompass a sense of appreciation (note how Novak tied them together in his interview quote above). But when supervisors and workplace cultures don't recognize the distinction and allocate both, they can fall prey to bottom-line thinking and focus their efforts on praising results alone.

This formula leads workplace relations to the dark side because it sees recognition as a tool of extrapolation. People become a means to an end — that end being sales, performance, and so on — rather than an end themselves.

### Unhealthy recognition nurtures toxic workplace cultures

The dangers of such a paradigm are best exemplified in the Japanese epidemic of karoshi, or death from overwork. In Japan, professionals routinely put in north of 100 hours a month of overtime. Such long hours paired with the general emotional and physical stress of work greatly increase the risk of stroke and heart disease among Japanese workers.

In a famous, and sadly representative,

# The dark side of ......

2013 incident, Miwa Sado, a reporter for NHK, died of congestive heart failure while desperately clutching her smartphone. In the month leading up to her death, she logged 159 hours of overtime and took only two days off. She was 31 years old.

And while there are many reasons for karoshi's prevalence — as with any such cultural issue, it's complicated by many confounders — an important factor is that Japanese business culture doles out recognition based almost exclusively on performance. And in Japan, performance means hours on the clock.

"Many companies [and] bosses evaluate performance by face-time," Yoko Ishikura, professor emeritus at Tokyo's Hitotsubashi University, told Business Insider. "They do not know how to evaluate performance other than the time."

He added: "We even have survey results [showing] that those who are productive (i.e., finish work efficiently) are not evaluated. Some even perceive those who are around long hours to be good or competent."

Nor is Japan alone in this regard. South Korea's tradition of hoeshik, a ritual of after-work gatherings for meals and copious drinking, is ostensibly a team-building exercise. In practice, however, it has evolved into unpaid work. These gatherings can last hours and in-office recognition becomes tied to attendance. The unspoken rule: Those who don't participate won't be up for promotions.

"It would be nice if companies would recognize employees with babies, for example, to exclude them from dinners or nights," Lee See-eun, a mother whose husband is rarely home due to his work obligations, told CNN. "Raising a child is a very valuable, meaningful, and very good thing from a personal point of view, but sometimes it feels like it doesn't get [recognized]."Then there's the United States. Americans work long hours, hardly take vacations (even when PTO is earmarked), and barely take any family leave compared to their European peers.

The reasons for these cultural expectations are, again, complicated. But one is that while U.S. companies extol the virtues of work-life balance, they seldom recognize employees for taking time away. Instead, both men and women can face stigma for the choice of taking parental leave.

### Workplace recognition for relationships

Appreciation alone can't erase these problems and blind spots as they are often entrenched in deep-seated cultural issues. But it may help alleviate them.

Appreciation more holistically travels throughout the org chart as anyone can provide it. It builds morale and motivation by being intrinsically rewarding. And it shows people that the value they bring can be just as, if not more, important than measurable metrics such as hours or output. How can we better promote recognition and appreciation in our workplaces and ensure it builds more human, and humane, workplaces? We recognize its significance to relationships and promote both toward that end.

The first step is simply listening. Genuine listening cultivates relationships by understanding the other person and applying that understanding toward cooperation. It also makes people more open, less defensive, and more willing to work toward shared goals.

"One of the best things you can do for the people you work with is also one of the simplest: Put down your phone, turn away from your computer, and genuinely listen to them," Robbins writes.

Another step is to care for others as individuals rather than as a means for generating outcomes. Rather than use workplace recognition to drive people toward a specific goal, it must pair with appreciation to account for and nurture the whole person. By helping others see the good in themselves, you diffuse that positivity within your relationship and across the social structure.

"One of the things I believe is people will not care about you until you show that you care about them. And this is so important for you as a leader to let people know that you're vested in their success, and you're vested in helping them be the best that they can be. If you do that, boy, you're on your way to having a great relationship with your team," Novak said.

---

There is something disarming about Maria Sharapova, something at odds with her ready smile and glamor ous attire. And that something in her lifted her on Monday, 22 August 2005 to the world number one position in women's tennis. All this happened in almost no time. Poised beyond her years, the Siberian born teenager took just four years as a professional to reach the pinnacle. However, the rapid ascent in a fiercely competitive world began nine years before with a level of sacrifice few children would be prepared to endure.

Little Maria had not yet celebrated her tenth birthday when she was packed off to train in the United States. That trip to Florida with her father Yuri launched her on the path to success and stardom. But it also required a heart wrenching two–year separation from her mother Yelena. The latter was compelled to stay back in Siberia because of visa restrictions. The nine–year–old girl had already learnt an important lesson in life–that tennis excellence would only come at a price.

"I used to be so lonely," Maria Sharapova recalls. "I missed my mother terribly. My father was working as much as he could to keep my tennis–training going. So, he couldn't see me either". "Because I was so young, I used to go to bed at 8 p.m. The other tennis pupils would come in at 11 p.m. and wake me up and order me to tidy up the room and clean it." "Instead of letting that depress me, I became more quietly determined and mentally tough. I learnt how to take care of myself.

I never thought of quitting because I knew what I wanted. When you come from nothing and you have nothing, then it makes you very hungry and determined… I would have put up with much more humiliation and insults than that to steadfastly pursue my dream."

### Answer the following questions based on the reading passage.

1. How many year did Sharapova take to reach the pinnacle as a professional?

...............................................................................................

2. Whom did Maria Sharapova miss terribly? Why?

...............................................................................................

3. What penalty did Maria Sharapova have to pay, being younger than the other players?

...............................................................................................

4. What qualities of Maria Sharapova would you like to see incul cated by every sportsman in the competitive world of sports?

...............................................................................................

Answer:

1. Sharapova took just four years to reach the pinnacle.
2. Sharapova missed her mother Yelena terribly as she could not accompany her during her training phase in the United States due to visa restrictions.
3. Being younger than the other players, Maria Sharapova had to face humiliation and insults from the senior players in the form of cleaning the rooms.
4. Every sportsman must inculcate certain qualities in order to reach the pinnacle of success. He must be very brave and tough as there is cut-throat competition. He must be hungry for success and must possess the 3 Ds – dedication, determination and devotion. And last but not the least must have a 'never say die' attitude.






## குட்டிக் கதை ஒன்று படித்துப் பாருங்கள்



# சிங்கத் தோல் போர்த்திய கழுதை

ஒரு அடர்ந்த காடு. அந்த காட்டின் பக்கத்துக் கிராமத்தில் இருந்து ஒரு கழுதை வழி மாறி அந்த காட்டிற்குள் வந்தது. அந்த கழுதை வரும் வழியில் பல விலங்குகள் பயத்துடன் ஓடிக்கொண்டிருந்ததாம். அதில் ஒரு மானும் இருந்தது.

அப்பொழுது அந்த கழுதை மானிடம் ஏன் அனைவரும் இப்படி வேகமாக பயத்துடன் ஓடி செல்கின்றன? என்று கேட்டது. அதற்கு மான் இந்த காட்டில் சிங்கம் ஒன்று உள்ளது. அதனை கண்டுதான் நாங்கள் அனைவரும் இப்படி ஓடுகின்றோம் என்று கூறிவிட்டு சென்றது.

இருப்பினும் கழுதை சிங்கத்தின் வீரத்தை தெரிந்து கொண்டே அந்த காட்டிற்குள் சென்றது. சிறிது தூரம் கடந்து சென்றதில் கழுதை கலைப்படைந்துவிட்டது. பின் கழுதை அந்த காட்டிற்குள் ஒரு ஓடையைப் பார்த்தது.

பின் கழுதை தண்ணீர் அருந்த அந்த ஓடைக்கு சென்றது. அங்கே சில வேட்டைக்காரர்கள் தாங்கள் வேட்டையாடிய மான், புலி, சிங்கம் போன்ற விலங்குகளின் தோலை அங்கிருந்துப் பாறைகள் மேல் உலர வைத்திருந்தனர்.

அதனைப் பார்த்த கழுதைக்கு ஒரு ஆசை வந்தது. உடனே ஒரு சிங்கத்தின் தோலை எடுத்து தன் உடம்பின் மேல் போர்த்திக்கொண்டது. அந்த கழுதையும் பார்ப்பதற்கு சிங்கம் போலவே இருந்ததினால் மற்ற விலங்குகளும் கழுதையை சிங்கம் என்று நினைத்து பயந்து ஒதுங்கி சென்றன. மிருகங்கள் அனைத்தும் தன்னைப் பார்த்துப் பயந்து மரியாதையாக வழி விட்டு ஒதுக்குவதை பார்த்த கழுதைக்கு கர்வம் தலைக்கு ஏறியது. சிறிது தூரம் அந்த கழுதை அந்த காட்டில் உலவி கொண்டிருந்தது, அப்பொழுது அங்கு ஒரு நரியை பார்த்தது.

சரி இந்த நரியையும் பயமுறுத்தலாம் என்று நினைத்து, நரியின் அருகில் சென்றது நரியும் பயத்தில் நடுங்கிக்கொண்டே "சிங்க ராஜா, நான் தெரியாமல் இந்த பக்கம் வந்துவிட்டேன் இனி நான் இந்த காட்டிற்கே வரமாட்டேன் " என்று கழுதையிடம் கூறியது.

கழுதையும் சிங்கத்தை போல் கர்ஜிக்கணும்னு நினைத்து "ங்கெ ங்கெ" ன்னு கத்தியது. ஆகவே அதோட குரல் அது கழுதையினு நரிக்கு காட்டிக் கொடுத்தது. அதன் பிறகு அந்த கழுதைய நரி மதிக்கவே இல்லை.

அதுவும் இல்லாம "எனக்கு கோவம் வருவதற்குள் இங்கிருந்து சென்றுவிடு" என்றது கழுதை.

அதற்கு நரியோ கழுதையைப் பார்த்து முடியாது என்று பதில் கூறியது. மேலும் நரி கழுதையிடம், நீ சிங்கம் போன்று வேஷம் போட்டாலும் உன்னுடைய உண்மையான குணத்தை உன்னால் மாற்ற முடியாது என்று கூறியது.

கழுத்தையும் அவமானத்தில் தலை குனிந்தது. அதன் பிறகு தனது வேஷத்தை கலைத்துவிட்டு, தனது உண்மையான உருவத்தில் சென்றது.

### இந்த கதையின் நீதி

நாம் நாமாக இருக்கும் போதுதான் மதிப்படைகிறோம். அடுத்தவர் போல வேஷம் போட்டாலோ அல்லது மற்றவர்கள் போல நடந்து கொள்வதாலோ அவமானம் தான் மிஞ்சும். ஆகவே நாம் நாமாகவே இருப்போம்.

# வித்தியாசமாகத் தூங்கும் விலங்கு எது தெரியுமா..?



பொதுவாக மனிதனாக இருந்தாலும் சரி விலங்காக இருந்தாலும் சரி உடல் உறுப்புகள் என்பது அனைவருக்கும் ஒன்று தான். ஆனால் மனிதர்களும் விலங்குகளும் செயல்படும் திறன் மட்டும் வேறுபாடாக இருக்கும் என்று நாம் நினைத்து கொண்டிருப்போம். ஆனால் அது உண்மை கிடையாது. அதனால் இன்றைய பதிவில் வித்தியாசமாக தூங்கும் விலங்கு எது..? மற்றும் அதனுடைய தகவல்களையும் தெரிந்துக்கொள்ள போகிறோம்.

டொல்பின்கள் மற்ற விலங்குகளை போலவோ அல்லது மனிதர்களை போலவோ இரண்டு கண்களையும் மூடிக்கொண்டு தூங்காது. அதனால் வித்தியாசமாக தூங்கும் விலங்கு டொல்பின் தான்.

டொல்பின்கள் எப்போதும் தூங்கும் போது ஒரு கண்ணை மூடியும் மற்றொரு கண்ணை திறந்தும் தான் தூங்கும். ஏனென்றால் இரண்டு கண்களையும் மூடிக் கொண்டு தூங்கும் போது அது இறந்து விடும்.

இரண்டு கண்களையும் மூடிக்கொண்டு டொல்பின் தூங்கினால் அது இறந்து விடும் அல்லது அதனுடைய மூளை செயல் இழந்து விடும். அதனால் வித்தியசமாக தூங்கும் திறன் கொண்டது டொல்பின்.

டொல்பின் நீரில் வாழக்கூடிய ஒரு பாலூட்டி உயிரினமாகும். இந்த டொல்பின் 20 ஆண்டுகள் வரை வாழும் ஒரு உயிரினம் ஆகும்.

இது 1.2 மீற்றரில் இருந்து 9.5 மீற்றர் வரை நீளமும் மற்றும் 40 கிலோ கிராம் முதல் 10 தொன் வரை எடையும் கொண்ட சிறப்பு வாய்ந்த ஒரு விலங்கு டொல்பின்.

இந்த டொல்பின்கள் அனைத்து விலங்குகளையும் விட மிக வேகமாக நீச்சல் அடிக்கும் திறன் கொண்டது. அது மட்டும் இல்லாமல் நீருக்கு மேலையும் மற்றும் நீருக்கு கீழேயும் நன்றாக கூர்மையாக பார்க்கும் சிறப்பு வாய்ந்தது.

இத்தகைய டொல்பின்கள் அதனுடைய பல்லின் எதிர் ஒளியை வைத்து ஒரு பொருள் இருக்கும் இடத்தை சரியாக கண்டுபிடிக்கும் தன்மை கொண்டது.

# கோபம் வந்தால் வாலை மட்டும் ஆட்டும் விலங்கு எது தெரியுமா..?

கோபம் என்பது அனைவருக்கும் உணர்ச்சிவசமாக வரக்கூடிய ஒன்று. இந்த கோபம் மனிதர்களாக இருந்தாலும் விலங்குகளாக இருந்தாலும் கோபம் படும் முறை என்பது ஒன்று தான். அதனை வெளிப்படுத்துவதில் தான் வேறுபடுகின்றன. அத்தைய கோபம் வரும் போது ஒவ்வொருவரும் ஒரு செயலை செய்கின்றன. விலங்குகளை பொறுத்தவரை நாய் கோபம் வந்தால் குரைக்கும் அல்லது கடிக்கும். மாட்டிற்கு கோபம் வந்தால் முட்டும் மற்றும் குரங்கிற்கு கோபம் வந்தால் அதனுடைய கைகளால் கீறி விடும். இந்த வரிசையில் கோபம் வந்தால் வாலை மட்டும் ஆட்ட கூடிய விலங்கு என்ன என்பதை பார்ப்போமா? கோபம் வந்தால் தன்னுடைய வாலை மட்டும் ஆட்டும் விலங்கு பூனை. இந்த பூனை ஒரு சிலர் வீட்டில் செல்ல பிராணியாகவும் வளர்ந்து வருகிறது.

இத்தகைய பூனை கோபம் வந்தால் தன்னுடைய வாலை ஆட்டுவது அல்லது வாலை தரையில் அடிப்பது போன்ற செயல்களை செய்து வருகிறது.

இந்த பூனை பலநிறங்களில் 2 வகையாக காணப்படுகிறது. அதுபோல பூனை பாலூட்டி இனத்தை சேர்ந்த ஒரு வகையான விலங்கு ஆகும்.

பண்டைய எகிப்தில் இந்த பூனை அவர்கள் வழிபடும் விலங்குகளாக இருக்கின்றன. அதுமட்டும் இல்லாமல் எல்லோர் வீட்டிலும் பூனையை எகிப்தியர்கள் வளர்த்து வருகின்றனர்.

### பூனையின் சிறப்புகள்

பூனை வால் ஆடுவதின் சிறப்புகள் என்னென்ன என்பதை பற்றி விரிவாக இங்கு ஆராய்வோம்.

பூனை தன்னுடைய வால் நுனியால் லேசாக வாலை ஆட்டினால் அது உங்களின் செயலை கவனித்து கொண்டிருக்கிறது என்று அர்த்தம்.

அதே பூனை வேகமாக அதனுடைய வாலை ஆட்டினால் உங்கள் மீது கோபமாக இருக்கிறது அதனால் நீங்கள் அதன் பக்கத்தில் வரக்கூடாது என்று பூனை அதனுடைய சைகையால் உங்களுக்கு தெரியப்படுத்துகிறது.

இத்தகைய பூனை தன்னுடைய வாலை தாழ்வாக லேசாக ஆட்டினால் அது கவலையுடன் இருப்பதை வெளிக்காட்டுகிறது. அந்த பூனை உங்களுடைய கால்களுக்கு அடியில் வந்து அமர்ந்தது என்றால் உங்கள் வீட்டில் எதையோ பார்த்து பயந்து இருப்பதை அதை உங்களிடம் தெரியப்படுத்துகிறது. பூனை சற்று ஆரோக்கியம் குறைவாக இருக்கும் போது தன்னுடைய வாலால் உடலை முழுவதுமாக சுருட்டிக் கொள்ளும்

# புதுவருட வாழ்த்துக்கள் | Happy New Year 2023

அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்..! பிறந்த நாள், திருமண நாள் போன்ற எல்லா பண்டிகைக்கும் வாழ்த்து தெரிவிப்பது சந்தோசத்தை அளிக்கின்றது.

இந்த பிறந்த நாள், திருமண நாள் ஒருவரை மட்டும் குறிப்பிட்டு வாழ்த்து கூறுவோம். ஆனால் வருடம் பிறக்கிறது என்றால் நண்பர்கள், உறவினர்கள், நம் போனில் இருக்கும் Contact அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்து கூறுவோம்.

ஏனென்றல் வருடம் தொடக்கம் என்றால் அனைவருக்கும் இனிய வருடமாக இருக்கும். அதேபோல் அவர்கள் வாழ்க்கையில் இந்த வருடம் முழுவதும் மகிழ்ச்சி நிறைந்திருக்க வேண்டும் என்று சொல்லி வாழ்த்துக்கள் செய்திகளை அனுப்புவோம்..!

வருவதை வருடமாக பார்க்காமல்
வாழ்க்கையாக நினைத்து
அடுத்த அடியை எடுத்து வைக்க
வேண்டும்.

அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்



# உடல் நலம் பெற சிறந்த ஆரோக்கிய குறிப்புகள்..!



நம் உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். உதாரணமாக நாம் நன்றாக தான் இருப்போம் திடீர் என்று நமக்கு உடல் நல கோளாறு ஏற்பட்டுவிடும். அந்த பிரச்சினையை சரிசெய்ய நம்மால் உடனே மருத்துவரை அணுக முடியாது. இருந்தாலும் நமக்கு சில கைவைத்தியம், பாட்டி வைத்தியம், சித்த வைத்தியம், வீட்டு வைத் தியம்,நாட்டு மருத்துவம் என்று நமக்கு ஏதாவது தெரிந்திருந்தால் அந்த ஆரோக்கிய பிரச்சினையை சரி செய்துவிட முடியும்.

நம் உடலிலுள்ள அதிகப்படியான கொழுப்பை கரைக்கும் உணவுகள் எது என்பதை பற்றி பார்த்தால் இன்றைய நிலையில் பல பேருக்கு இருக்க கூடிய பிரச்சினைகளில் உடல் எடை அதிகரிப்பும் ஒன்று. உடல் எடை அதிகரிப்பதற்கு முக்கிய காரணமாக இருப்பது நாம் உண்ணும் உணவு முறை தான். இன்றைய காலகட்டத்தில் நாம் கொழுப்பு நிறைந்த துரித உணவுகளை உண்பதால் தான் உடல் எடை அதிகரிக்கிறது. அதுபோல நாம் உண்ணும் உணவு களாலும் நம் உடலில் இருக்கும் கொழுப்புகளை கரைக்க முடியும்.

கத்தரிக்காயில் கலோ ரிகள் குறைவாக இருக்கிறது. அதுமட்டுமில்லாமல், இதில் நார்ச்சத்து அதிகம் இருப் பதால் இது உடலில் இருக்கும் அதிகப்படியான கொழுப்பு களை கரைக்க உதவுகிறது.

வெங்காயத்தில் க்யூர சிடின் என்னும் ப்ளே வோனாய்டு அதிகம் இருக் கிறது. அதனால் இது இரத்த குழாய்களில் தங்கியுள்ள தேவையற்ற கொழுப்பை கரைக்கும் தன்மை கொண் டுள்ளது. எனவே வெங்காயத்தை தினமும் உணவில் சேர்த்து சாப்பிட்டு வந்தால் கொழுப்புகள் கரைவ தோடு, இதய ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது.

பூண்டில் அல்லிசின்(Allicin) என்ற பொருள் அதிகம் இருப்பதால், உடலில் தங்கியிருக்கும் கொழுப்புக்களை கரைத்து, உடல் எடையை குறைக்க உதவுகிறது. இதை அன்றாடம் உணவில் கலந்து சாப்பிட்டு வருவதால் கொலஸ்ட்ரால் பிரச்சினை வராமல் தடுக்கலாம். இதில் இருக்கும் அல்லிசின் என்ற பொருள் இதய ஆரோக்கியத்தை மேம்படுத் துகிறது.

வெண்டியில் கொலஸ்ட்ராலை குறைக்கும் பண்புகள் அதிகம் இருப்பதால், இதை தினமும் உணவில் சேர்த்து சாப்பிட்டு வரலாம். இதில் அதிகளவு நார்ச்சத்தும், குறைந்த அளவு கலோரிகளும் இருப்பதால் இது உடலில் இருக்கும் தேவையற்ற கொழுப்புகளை கரைக்க உதவுகிறது.

பீன்ஸ்ல் நார்ச்சத்து அதிக அளவில் காணப் படுவதால், இதை அன்றாடம் உணவில் சேர்த்து சாப்பிட்டு வரலாம். பீன்ஸில் கொழுப்புகளை கரைக்கும் பண்புகள் அதிகம் இருப்பதால் இதை தண்ணீரில் வேக வைத்து, அந்த நீரை வடிகட்டி குடித்து வந்தால் உடல் எடையை குறைக்க முடியும்.






## தொப்பை குறையணுமா? இரவில் இதைச் சாப்பிடுங்க!



இப்போதெல்லாம் ஆண், பெண் நிறைய பேருக்கு இருக்கும் ஒரே பிரச் சனை தொப்பை தான். இந்த தொப் பையை குறைப்பதற்கு நிறைய டயட் முறைகளை பின்பற்றி இருப்பார்கள். ஆனால் அவர்களுக்கு தொப்பை குறையவே குறையாது. ஆனால் நீங்கள் சரியான அளவு உணவை சரியான நேரத்தில் உணவருந்தினீர்கள் என்றால் கண்டிப்பாக உங்கள் தொப்பையை குறைக்க முடியும். அதேபோல் சாப்பிட்ட உடனேயே தூங்கவோ அல்லது ஒரே இடத்தில் அமர்ந்திருந்தாலும் கண்டிப்பாக தொப்பை போடும் மேலும் உடல் உடை யும் அதிகரித்துவிடும். ஆகவே சாப்பிட்ட வுடன் சிறிது நேரம் நடக்கவும். இவ்வாறு செய்வதினால் உடல் எடை குறைவதை நீங்கள் உணரமுடியும்.

வாழைப்பழத்தில் அதிக மருத்துவ குணங்கள் அடங்கியுள்ளன. ஏ, பி, பி2, சி மற்றும் சுண்ணாம்புச்சத்து ஆகியவை உள்ளன. உடல் எடை குறைக்க உதவும் பழங்களில் ஒன்றாக வாழைப்பழம் விளங் குகிறது. செவ்வாழை, பூவம் பழம், கற்பூர வள்ளி, மொந்தம் பழம் ஆகிய வாழைப் பழங்கள் உடல் எடையைகுறைக்க உத வும். இவற்றில் உள்ள அதிகளவு B6 மற்றும் நார்சத்து இருப்பதனால் இவை கள் உடலில் கொழுப்புகளை குறைக்கும்.

வேர்க்கடலை வெண்ணெய் மிகவும் ஆரோக்கியமானது. உலகிலேயே மிக குறைந்த வகையில் கிடைக்கும் ஆரோக் கியமான நட் உணவில் முதன்மை இடம் வகிப்பது வேர்க் கடலை தான். இதன் மூலம் ஆரோக்கியமான புரதமும் கிடைப் பதால், உடற்பயிற்சி செய்வோ ருக்கு இது ஒரு சிறந்த உணவுப் பொருளாகவிளங்குகிறது. ஆகவே இரவில் பசி எடுத்தால், வேர்க்க டலை வெண்ணெய் தடவி 2 துண் டுகள் முழு தானிய ரொட்டியை சாப்பிடலாம். இது வளர்சிதை மாற்றத்தை அதிகரிக்கிறது மற் றும் எடை குறைக்க உதவுகிறது.

எடையை குறைக்க முயற்சிப்பவர் களுக்கு தயிரில் இருக்கும் ஒரு நல்ல அளவு புரதம் பெரிதும் உதவுகிறது. தயிரில் இருக்கும் புரதம் பசியுணர்வை கட்டுக்குள் வைத்து தேவையற்ற ஸ்னாக்ஸ்களை சாப்பிடுவதை தவிர்க்க செய்கிறது.

மேலும் வளர்சிதை மாற்றத்தை அதிகரிப்பதிலும், உடல் எடையை சீராக் குவதிலும் குறிப்பிட்ட பங்கு வகிக்கிறது. கல்சியம் நிறைந்துள்ள தயிர் எடையை குறைக்க உதவுகிறது.

உடல் எடையை குறைக்க உதவும் உணவு வகைகளில் பாதாம் பருப்புக்கு முக்கிய பங்குண்டு. இதில் ஒமேகா 9, ஒமேகா 6 மற்றும் ஒமேகா 3 போன்ற கொழுப்பு அமிலங்கள் நிறைந்துள்ளன. இவை அனைத்தும் ஆரோக்கியமான கொழுப்புகள் கொண்டதாகவும் நம் உடலுக்கு நன்மை தரக்கூடியதாகும்.

உணவு சரியாக ஜீரணிக்கப்படாவிட் டால் அமிலத்தன்மை, வீக்கம் போன் றவை ஏற்பட்டு நாம் உண்ணும் உணவு கெட்ட கொழுப்புகளாக உடலில் தேங் குகிறது. இதன் காரணமாக உடல் எடை அதிகரிக்கிறது. எனவே உடல் எடையை குறைக்க விரும்புவோர் முழு பாதாமை பருப்பை தோலுடன் சேர்த்து அப்படியே கடித்து சாப்பிட வேண்டும். இவ்வாறு சாப்பிடுவதினால் உடல் எடையை எளிதில் குறைக்க வழி வகுக்கும்.

## பால் மற்றும் தயிரில் உள்ள நன்மைகள்



பாலின் நன்மைகள் – பிறந்த குழந்தை முதல் முதியவர் வரை எல்லோ ருக்கும் ஏற்ற உணவாக பால் உள்ளது. பாலில் தாய்ப்பால், பசும் பால், எருமைப் பால், ஆட்டுப் பால் என சில வகைகள் உண்டு.

இந்த பால் மற்றும் தயிர் இரண்டி லும் அதிகமாக கல்சியம் சத்து உள் ளது. இது எலும்பு மற்றும் பற்கள் இரண்டுக்கும் வலிமை அளிக்கிறது. பால் மற்றும் தயிர் இரண்டும் நமக்கு மிக எளிதாக கிடைக்க கூடியவை, ஆகையால் தினமும் அன்றாட உண வில் அதிகம் பால் மற்றும் தயிர் சேர்த்து கொள்வது மிகவும் நன்மையளிக்கும்.

### எலும்பு வலிமைக்கு

எலும்புகளின் வலிமைக்கு கல் சியம் மிகவும் முக்கிய மானது. இத்த கைய கல்சியம் வயது அதிகரிக்கும் போது குறைய ஆரம்பிக்கும். பாலில் உள்ள கால்சியம் உங்களின் உடலை பராமரிக்கும். எனவே தினமும் அன்றாட உணவில் பால் சேர்த்து கொள்வது மிகவும் நல்லது.

### இரத்த கொதிப்புக்கு

இரத்தக் கொதிப்பு கட்டுப்பாட்டிற் கும், உடல் பருமன் குறைவதற்கும், இதய நோயிற்கும், புற்றுநோய், நீரிழிவு நோய் உள்ளவர்களும் பாலை தினமும் எடுத்துக் கொள்ளலாம்.

பாலில் விற்றமின் பி12 உள்ளது. இந்த விற்றமின் பி 12 நரம்பு மண்டலத் தின் ஆரோக்கியத்திற்கு அத்தியாவ சியமானது. எனவே தினமும் காலை யிலும், இரவிலும் பால் அருந்துவதை பழகிக்கொள்ளவும்.

### இரத்த அழுத்தத்திற்கு

பாலில் பொட்டாசியம் உள்ளது. இதில் உள்ள பொட்டாசியம் இரத்த அழுத்தத்தை சீராக வைத்துக் கொள்ள பெரிதும் உதவுகிறது.

### தாய்ப்பால் சுரப்பு அதிகமாக்க

தாய்ப்பால் கொடுக்கும் பெண்கள் தினமும் பூண்டு கலந்த பால் குடித்து வந்தால், தாய்ப்பால் சுரப்பு அதிகரிக்கும் மற்றும் உடலில் உள்ள கெட்ட கொழுப் பைக் கரைக்க உதவுகிறது.

### வயிற்றில் உள்ள கிருமிகள் அழிய

வயிற்றில் உள்ள கிருமி அழிய தினமும் பாலில் மஞ்சள் கலந்து நன்கு காய்ச்சி ஒரு டம்ளர் குடித்து வந்தால் உடல் மற்றும் வயிற்றில் உள்ள கிருமிகளை அழித்து உடலை ஆரோக் கியத்துடன் வைத்துக் கொள்ள உதவும்.

### முகப்பருக்கள் மறைய

உங்கள் முகத்தில் அதிகம் பருக்கள் உள்ளதா? அதற்கு கவலைப்பட தேவை யில்லை. இதற்கு எளிய முறையாக பூண்டு பாலை முகத்தில் மசாஜ் செய்து சிறிது நேரம் கழித்து முகத்தை கழுவுங் கள், இந்த முறையை வாரம் இரண்டு முறை செய்து வாருங்கள் விரைவில் முகப்பருக்கள் மறைந்து விடும்.



# உலகில் இரவே இல்லாத 6 நாடுகளை பற்றி உங்களுக்கு தெரியுமா..?



பொதுவாக நாட்களை கணக்கில் வைத்து தான் மனிதனின் வாழ்க்கை முறை செயல்படுகிறது. ஒரு நாளில் 24 மணிநேரம் உள்ளது. அதில் முதல் 12 மணிநேரம் சூரிய ஒளியால் சூழப்பட்டு பகலாகவும் அடுத்த 12 மணிநேரம் சூரிய ஒளி இல்லாமல் இரவாக மனிதர்கள் ஓய்வு எடுக்கும் நேரமாகவும் உள்ளது.

ஆனால் பூமியில் சில இடங்களில் 70 நாட்களுக்கும் மேலாக சூரியன் மறையாமல் அப்படியே பகலாகவே உள்ளது. அப்படி உள்ள 6 இடங்களை பற்றி பார்ப்போம் .

என்னது? வருடத்தில் 70 நாட்களுக்கும் மேலாக சூரியன் மறையாமல் இருக்கிறதா? உண்மை தானா? சும்மா சொல்லாதீங்கப்பா என்று நீங்கள் சந்தேகிப்பது புரிகிறது. ஆனால், நீங்கள் சந்தேகிக்க வேண்டிய அவசியமேயில்லை, இந்த செய்தி உண்மையானது தான்.

நாங்கள் கூறியுள்ள குறிப்பிட்ட காலகட்டத்தில் நீங்கள் இந்த 6 இடங்களுக்கும் நேரில் சென்றால் வெறும் பகல் பொழுதை மட்டும் உங்கள் வாழ்நாளில் அனுபவிக்கலாம். அவை எந்தெந்த இடங்கள் என்பதை பார்க்கலாம்.

## நோர்வே

சூரியனே அஸ்தமிக்கதா இடங்களின் பட்டியலில் முதலாவதாக நாம் பார்க்க இருப்பது நோர்வே பற்றி தான். ஐரோப்பாவின் வடக்கு பகுதியான நோர்வேயில் ஏப்ரல் முதல் ஆகஸ்ட் மாதம் வரை 5 மாதங்க ளுக்கு சூரியன் மறைவதே இல்லை. அதாவது இரவே கிடையாது ஏனெனில் இது ஆர்டிக் பகுதிக்கு மிக அருகில் உள்ளது.

இதன் காரணமாக பூமி சுழன்றாலும் கூட இதன் அட்சில் எந்தவித மாற்றமும் இருக்காது. இதன் காரணமாக கோடை காலத்திலிருந்து அந்த நாட்டில் சூரியன் 24 மணிநேரமும் காணப்படும்.

## கனடா

அடுத்து கனடாவின் வடமேற்குப் பகுதியில் ஆர்க்டிக் வட்டத்திற்கு மேலே இரண்டு டிகிரிக்கு தொலைவில் நுனாவுட் (Nunavut) என்ற இடம் அமைந் துள்ளது. இந்த இடம் தொடர்ச்சியாக இரண்டு மாதங்களுக்கும் மேலாக சூரிய ஒளியைக் காண்கிறது.

ஆம் வாரத்தின் 7 நாட்களிலும் 24 மணிநேரமும் இங்கு சூரியன் அஸ்தமனம் ஆகாமல் அப்படியே பகல் பொழுதாக நீடிக்கிறது. அதேசமயத்தில், குளிர்காலத்தில் இந்த இடம் தொடர்ந்து 30 நாட்களுக்கு முழுமையாக இருளால் சூழப்பட்டிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஐஸ்லாந்து

கிரேட் பிரிட்டனுக்குப் பிறகு ஐரோப்பாவின் மிகப்பெரிய தீவு என்றால் அது ஐஸ்லாந்து தான். மேலும் இங்கு கொசுக்களே கிடையாது என்பதும் குறிப்பிடத்தக்க ஒரு செய்தியாகும்.

இந்த ஐஸ்லாந்தில் ஜூன் மாதம் முழுவதும் மிட்நைட் சன் என்று அழைக்கப்படும் நள்ளிரவு சூரியனை இங்கு காண முடிகின்றது.

## அலாஸ்கா

அலாஸ்காவில் உள்ள பாரோ (Barrow) என்ற இடத்திலும் சூரியன் மறைவதில்லை. மே மாதத்தின் பிற்பகு தியிலிருந்து ஜூலை மாதத்தின் இறுதி வரை இங்கு சூரியன் மறைவதே இல்லை.

இது நவம்பர் தொடக்கத்தில் இருந்து அப்படியே அடுத்த 30 நாட்களுக்கு தலைகீழாகச் செயல்படுகிறது. இந்த குறிப்பிட்ட காலத்தில் சூரியன் உதிக்கவே உதிக்காது என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

## பின்லாந்து

அடுத்து ஆயிரம் ஏரிகளை கொண்ட தீவுகளின் நிலம் என்று அழைக்கப்படும் பின்லாந்து உள்ள பெரும்பாலான பகுதிகளில் சூரியன் அஸ்தமிப்பதே இல்லை. அதிலும் குறிப்பாக கோடைக் காலத்தில் தொடர்ச்சியாக 73 நாட்களுக்கு சூரியன் அஸ்தமிப்பது இல்லை.

இந்த 73 நாட்களும் மக்கள் நிலையான பகல்பொழுதை மட்டும் அனுபவிக்கிறார்கள். அதேசமயம், குளிர்காலத்தில் இந்த பகுதி சூரிய ஒளியை பார்க்காது என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

## ஸ்வீடன்

இறுதியாக பட்டியலில் இருக்கும் பகுதி ஸ்வீடன் ஆகும். இங்கு மே தொடக்கத்தில் இருந்து ஆகஸ்ட் இறுதி வரை நள்ளிரவில் தான் சூரியன் மறையும்.

அதேசமயத்தில் மறைந்த சிறிது நேரத்தில் அதாவது அதிகாலை 4 மணிக்கு எல்லாம் நாட்டில் மீண்டும் சூரியன் உதயமாகிவிடும். ஸ்வீடனில் தொடர்ச்சியான சூரிய ஒளிக்காலம் வருடத்தின் ஆறு மாதங்கள் வரை நீடிக்கும்.

இங்கு இருக்கும்போது நீங்கள் நீண்ட சூரிய ஒளி நாள்களை அனுபவிக்க முடியும்.

# வயிற்றில் பல் இருக்கும் உயிரினம் எது தெரியுமா..?



**வயிற்றில் பல் இருக்கும் உயிரினம் நண்டு. இந்த நண்டு அசைவ சாப்பாட்டில் அனைவருக்கும் பிடித்த ஒரு உணவாக இருக்கிறது.**

**இத்தகைய நண்டுகள் நன்னீர் மற்றும் உவர்நீரில் தான் வாழ்கின்றன. அதேபோல நண்டு வாழ்வதற்கு வலை போன்ற அமைப்பினை அமைத்து கொண்டு அதன் உள்ளே வாழ்கிறது.**

**இந்த நண்டுகள் 10 கால்களையும் அதன் மேலே ஒரு ஓட்டினையும் கொண்டுள்ளது. அதில் 2 கால்களை மட்டும் கவ்விகளாக நண்டு பயன்படுத்தி கொள்கிறது.**

**அதுமட்டும் இல்லாமல் நண்டு அதனுடைய ஓட்டினை வருடத்திற்கு ஒரு முறை மாற்றி கொள்ளும் சிறப்பு கொண்டது.**

**இதில் பெண் நண்டுகள் மற்றும் ஆண் நண்டுகள் இரண்டுமே தன்னுடைய வயிற்றில் பல்லினை கொண்டிருக்கிறது. பெண் நண்டுகள் அதனுடைய அடி வயிற்றிற்கும் கீழே முட்டைகளை வைத்து இருக்கிறது.**

**தேங்காய் கால் நண்டு, குதிரைலாட நண்டு, நீலக் கால் நண்டு மற்றும் குழுவான் நண்டு என மொத்தம் நான்கு வகைகளாக இருக்கிறது.**

**இதில் இரண்டு வகை நண்டினை மட்டுமே மக்கள் பெரும்பாலும் உணவாக சாப்பிடுகின்றனர்.**




**நண்டில் மருத்துவக் குணங்களும் அதிகமாக இருக்கிறன.**

# கல்விக்கதிர்

- அகரன் -

## உலகில் அதிகம் படித்த மக்கள் இருக்கும் நாடுகள்




நாம் வாழும் இந்த உலகில் பல நாடுகள் இருக்கின்றன. மனிதனாக பிறந்த அனைவரும் கல்வி என்ற ஒன்றை கட்டாயம் கற்றிருக்க வேண்டும். கல்வி ஒரு மனிதனுக்கு அழியா செல்வமாக இருக்கிறது. இந்த உலகில் கல்வியில் தலை சிறந்து விளங்கும் நாடுகள் எத்தனையோ உள்ளன.

கல்வி என்பது ஒரு மனிதனுக்கு எவ்வளவு முக்கியம் என்று நம் அனைவருக்குமே தெரியும். ஒரு மனிதன் உயர்வதற்கு காரணமாக இருப்பது கல்வி தான். கல்வி மனிதனின் வளர்ச்சிக்கு மட்டும் முக்கியமானதாக இல்லை. ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும் கல்வி முக்கியமானதாக உள்ளது. அதுபோல சில நாடுகளில் அதிகம் படித்த மக்கள் வசிக்கிறார்கள். படித்த மக்கள் வசிக்கும் நாடுகள் எது என்று பார்க்கலாம் .கனடா தான் கல்வி பட்டியலில் முதலிடத்தை பிடித்துள்ளது. உலகில் அதிகம் படித்த மக்கள் வசிக்கும் நாடாக கனடா உள்ளது. கனடா நாட்டின் கல்வி அறிவு 60 சதவீதமாக உள்ளது. கனடா நாட்டில் தான் 89% மக்கள் இடைநிலை கல்வியை கற்றிருக்கிறார்கள்.

கல்வியில் சிறந்து விளங்கும் நாடுகளின் பட்டியலில் ரஷ்யா 2 ஆவது இடத்தை பிடித்துள்ளது. ரஷ்யா கல்வியில் வெற்றி பெற்ற நாடாக உள்ளது. இது 145,805,947 மக்கள் தொகையை கொண்டுள்ளது. ரஷ்யா 50.70 % கல்வியில் சிறந்து விளங்குகிறது.

ஜப்பான் கல்வியில் சிறந்து விளங்கும் நாடுகளின் பட்டியலில் 3 ஆவது இடத்தை பிடித்துள்ளது. ஜப்பானில் வசிக்கும் குடிமக்கள் கணிதம் அறிவியல் மற்றும் பல பாடங்களை படிப்பதிலும் எழுதுவதிலும் ஆர்வம் கொண்டவராக இருக்கின்றார்கள். 125,584,838 மக்கள் தொகையை கொண்ட ஜப்பான் 52.70 % கல்வியில் சிறந்து விளங்குகிறது.

லக்சம்பர்க் என்னும் நாடு கல்வி நாடுகளின் பட்டியலில் 4 ஆவது இடத்தை பிடித்துள்ளது. லக்சம்பர்க் நாட்டில் இருக்கும் மக்கள் பன்மொழி மற்றும் அடிப்படைக் கல்வி, இடைநிலைக் கல்வி மற்றும் உயர்கல்வி போன்றவற்றை கற்றுகொள்கின்றனர். இந்த நாடு 51.30% கல்வியில் புகழ் பெற்ற நாடாக இருக்கின்றது.

இந்த கல்வியின் பட்டியலில் தென் கொரியா 5 ஆவது இடத்தை பிடித்துள்ளது. இந்த நாடு 51,329,899 மக்கள் தொகையைக் கொண்டுள்ளது. இது 50.70 % கல்வியில் சிறந்த நாடாக திகழ்கிறது.

இந்த நாடானது கல்வியில் சிறந்து விளங்கும் நாடுகளின் பட்டியலில் 6 ஆவது இடத்தை பிடித்துள்ளது. இஸ்ரேல் 8,922,892 மக்கள் தொகையை கொண்டுள்ளது. இது 50.10% கல்வியில் புகழ் பெற்ற நாடாக இருக்கிறது.

உலகத் தரம் வாய்ந்த பல்கலைக் கழகங்களை கொண்டுள்ள நாடாக அமெரிக்கா உள்ளது. உலகிலேயே அதிகம் படித்த நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா 7 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. இது 334,805,269 மக்கள் தொகையை கொண்டு, 50.10% கல்வியில் சிறந்து விளங்குகின்றது.

அயர்லாந்து கல்வியில் 8 ஆவது இடத்தை பிடித்துள்ளது. இது 5,020,199 மக்கள் தொகையை கொண்டு மற்றும் 49.90 சதவீதம் கல்வியறிவு விகிதத்தில் உலகிலேயே மிகவும் படித்த நாடாக உள்ளது.

உலகில் அதிகம் படித்த நாடுகளின் பட்டியலில் இங்கிலாந்து 9 ஆவது இடத்தை பிடித்துள்ளது. இது 68,497,907 மக்கள் தொகையை கொண்டுள்ளது. இந்த நாடு 49.90% கல்வியில் சிறந்த நாடாக திகழ்கிறது.

கல்வியில் சிறந்து விளங்கும் நாடுகளின் பட்டியலில் ஆஸ்திரேலியா 10 ஆவது இடத்தில் உள்ளது. இது 26,068,792 மக்கள் தொகையை கொண்டுள்ளது. உலகின் முதல் 10 படித்த நாடுகளின் பட்டியலை ஆஸ்திரேலியா நிறைவு செய்துள்ளது. இந்த நாடானது 49.30% சதவீத எழுத்தறிவு விகிதத்துடன் புகழ் பெற்ற நாடாக திகழ்கிறது.

# கலைக் கதிர்



## தமிழ் மொழியைப் பற்றி பலர் அறியாத உண்மைகள்

உலகின் மூத்த மொழியான தமிழ் மொழியைப் பற்றி பலர் அறியாத விவரங்கள் இதோ...

1 .சமீபத்தில் தமிழ்நாட்டின் ஆதிச்சனல்லூரில் கண்டெடுக்கப்பட்ட தமிழ்–பிராமண கல்வெட்டுகள் 500 கி.மு.–க்கு முன் தோன்றியதாக நம்பப்படுகிறது. இப்பழங்காலத்து மொழி இன்னும் 60 மில்லியன் மக்களால் பேசப்படுவதால், இது பழமையான இன்னும் வாழும் மொழியாகும்.

2. 2004–ஆம் ஆண்டில் தமிழ் ஒரு பாரம்பரிய மொழியாக யுனெஸ்கோவால் அறிவிக்கப்பட்டது.

3. தமிழ் பல அர்த்தங்களைக் கொண்டுள்ளது. மொழியின் பெயரைத் தவிர, தமிழ் அழகு, இனிப்பு மற்றும் இயற்கையைக் குறிக்கிறது.

4. உலகில் தெய்வமாக வணங்கப்படும் ஒரே மொழி தமிழ். காரைக்குடியில் உள்ள தமிழ்த்தாய் கோவிலில் இம்மொழி தாயாக வணங்கப்பட்டு வருகின்றது.



5. ‘ழ’ என்ற உச்சரிப்பைக் கொண்டிருக்கும் ஒரே மொழி தமிழ்.

6. தமிழ் சிங்கப்பூர் மற்றும் இலங்கையில் அதிகாரப்பூர்வ மொழியாகும். தென்னாப்பிரிக்கா, மலேசியா மற்றும் மொரிஷியஸ் ஆகிய நாடுகளில் சிறுபான்மை மக்களின் மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## புராணங்கள் கண்ட காவியக் காதல்

### இலக்கிய நயம்



காதலர் தினம் என்றால் என்னவென்று தெரியாதவர்கள் இருப்பது மிக அரிது. தோற்றத்தில் இது மேற்கத்திய உலகக் கொண்டாட்டமாக இருந்தாலும், அண்மைக் காலங்களில் உலகெங்கும் இந்நாள் மிகவும் பிரபலமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

அதிலும் குறிப்பாக இளைஞர்களிடம் இந்த கொண்டாட்ட மோகம் அதிகமாக உள்ளது எனலாம். இது மேல்நாட்டு பண்பாட்டை திணிக்கும் முயற்சி என்றும் காதலின் பெயரால் நினைவுப் பரிசுகளை விற்கும் வணிகத் திட்டம் என்றும் ஒரு சிலரால் குற்றம் சாட்டப்பட்டு வந்தாலும் இந் நாள் காதலையும் தாண்டி அன்பர்கள் தினம் என்றும் ஒருசார் மக்களால் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

ரோஜாக்களின் மவுசு இன்றைய நாளில் வெகுவாக அதிகரிக்கும் என்பது மட்டும் மறுக்கமுடியாத உண்மை.

உண்மை காதலுக்கு ‘ரோமியோ–ஜூலியட்’, ‘ஷாஜகான்–மும்தாஸ்’ என பல உதாரணங்கள் இன்றும் சொல்லப்படுகின்றன. இவைகள் மட்டுமல்லாமல் நம் இதிகாச புராணங்களும் பல காதல் கதைகளைச் சொல்லுகின்றன.

இராமாயணத்தில் நாம் அனைவரும் நன்கு அறிந்த காதல் கதாபாத்திரங்கள் ஸ்ரீராமரும் சீதா தேவியும். இவர்கள் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து வைத்திருந்தார்கள் என்பதை விளக்கும் பல சம்பவங்கள் இராமாயணத்தில் சொல்லப்பட்டுள்ளன.

அதில் ஒன்று பட்டாபிஷேக காட்சியாகும். பட்டாபிஷேகம் நல்லபடியாக நடந்தேறிய பின்னர் அனைவருக்கும் பரிசுகள் கொடுக்கப்பட்டன. அனுமனுக்கும் ஏதாவது கொடுக்க வேண்டும் என்பது சீதையின் எண்ணம்.

ராவணனால் கடத்தப்பட்டிருந்தபோது ஸ்ரீராமரைப் பற்றிய செய்தி கொண்டு வந்து தன் உயிர் காத்தவர் அனுமன் என்ற சிந்தனையோடு இராமரைப் பார்க்கிறாள் சீதை. ஸ்ரீ ராமரும் கண்களாலேயே உத்தரவு கொடுக்கிறார். தன் கழுத்தில் இருந்த மணி மாலையைக் கழற்றி அனுமனின் கையில் கொடுக்கிறார் சீதை.

பேசி கொள்ளாமலேயே கண் பார்வையிலேயே ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளும் தன்மை ஸ்ரீ ராமருக்கும் சீதைக்கும் இருந்ததாக இந்த காட்சி விளக்குகிறது.

மகாபாரதத்திலும் காதலின் சுவை சில காட்சிகளில் பரிமாறப்பட்டுள்ளன. உதாரணத்திற்கு காந்தாரி மற்றும் திருதராஷ்டிரன் அவர்களின் காதல் கதையை எடுத்துக் கொள்வோம்.

அவர்களின் காதல் திருமணத்திற்குப் பிறகே ஆரம்பித்தது. திருதராஷ்டிரனைச் சந்தித்த காந்தாரி அவர் கண் பார்வை அற்றவர் என்பதை உணர்கிறாள். கண் பார்வை இல்லாததால் தன் கணவர் அடைய முடியாத சந்தோஷத்தைத் தானும் அடைய அவள் விரும்பவில்லை.



ஆதலால் திருமணத்திற்குப் பிறகு தன் வாழ்நாள் முழுவதும் தன் கண்களைக் கட்டிக் கொண்டே வாழ்ந்தார் என்று மகாபாரதம் சொல்கிறது. காதலுக்கு நல்ல உதாரணம் இதை தவிர வேறு ஏதும் வேண்டுமா என்ன?

## பொங்கல் தமிழ்ப் புத்தாண்டா அல்லது இயற்கைக்கு நன்றி செலுத்தும் ஒரு நாளா?



உழைப்பின் பயனை அடைவதற்கு தமிழன் கொண்டாடும் ஒரே நாள் இந்த பொங்கல் திருநாள்.

இயற்கையோடு இயைந்து வாழ்வதே மனித வாழ்க்கையின் நியதி. அந்த இயற்கைக்கு நன்றி செலுத்தும் திருநாளாக அமைகின்றது இந்த பொங்கல் திருநாள். நம்முடைய வாழ்க்கை முறையானது சூரியனை சார்ந்து அமைந்திருப்பதால் சூரியனுக்கு நன்றி செலுத்தும் வகையில், முதல் நாள் பொங்கலிட்டு சூரியனுக்கு படைத்து இருகரம் கூப்பி நன்றி சொல்கிறோம்.

இந்தப் பொங்கல் திருநாளை உலகத் தமிழர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து கொண்டாடுகிறோம். சிலர் இந்த நாளை இயற்கைக்கு நன்றி செலுத்தும் ஒரு நாளாக கொண்டாடும் வேளையில், சிலர் இந்தத் திருநாளை தமிழ்ப் புத்தாண்டாகக் கொண்டாடுகின்றனர். ஒரே நாளை வெவ்வேறு நோக்கத்துடன் கொண்டாடுவதற்கான காரணம் என்னவாக இருக்கும் என்பது பலரின் கேள்வி.

சூரியனின் உதயமே ஒரு நா ளின் தொடக்கமாக தமிழன் வரையறுத்து வைத்துள்ளான். ஒருவாரத்தின் தொடக்கமும் ஞாயிறு அன்றே தொடங்குகிறது. 15 நாள் வளர்பிறை, 15 நாள் தேய்பிறை என்ற ஒரு மாதத்தின் தொடக்கமும் சூரியனால் தான் முடிவு செய்யப்படுகிறது.

பூமி சூரியனை சுற்றி வரும் ஒரு சுற்றுப் பாதை முடிந்து அடுத்த சுற்றுப்பாதையை ஆரம்பிக்கும் நாள் புதிய வருடத்தின் முதல் நாள். இதுவும் சூரியனை வைத்துதான் முடிவு செய்யப்படுகிறது. இதனால்தான் பொங்கல் தமிழ் புத்தாண்டாக கொண்டாடப்படுவதாக கருத்து நிலவுகிறது.

அதேவேளையில் சங்க காலம் முன்பே பொங்கல் விழா என்பது இயற்கைக்கு நன்றி சொல்லும் ஒரு திருநாளாகவே தொன்று தொட்டு வருகிறது. இது மரபு வழி கடைப்பிடித்துவரும் ஒரு விழா. ஆக இது இயற்கைக்கு நன்றி செலுத்தும் ஒரு விழா மட்டுமே என்ற கருத்தும் உண்டு.

## தைப்பூசத்தைக் கொண்டாடுவதற்கு வேறு காரணமும் உண்டு!

தை மாதத்தில் பூச நட்சத்திரத்தில் பௌர்ணமி தினத்தன்று தைப்பூசம் கொண்டாடப்படுகிறது என்பது அனைவரும் அறிந்த ஒன்றே. ஆனால் இந்தத் தைப்பூச தினத்தைக் கொண்டாடுவதற்கு வேறு காரணமும் கூறப்படுகிறது.

இயற்கையை மட்டுமே சார்ந்திருந்த மக்கள் காடுகளை விளை நிலங்களாக மாற்றினர். இந்த நிலங்களிலிருந்து அறுவடை என்பது தை மாதத்தில்தான் நடக்கும். இந்த அறுவடை எல்லாவற்றுக்கும் மூலகாரணமாக இருப்பவன் இறைவன்.

வித்தைக் கொடுக்கும் இறைவனுக்கு விளைவைக் கொடுக்கும் நாளாக இந்தத் தைப்பூசம் திகழ்கிறது. வித்து என்பது இறைவன் மட்டுமே கொடுக்கும் ஒன்று. அந்த வித்து மூலமாகத்தான் விளைவை மனிதன் உருவாக்குகிறான். ஆக வித்தைக் கொடுத்த வித்தயைக் கற்ற இறைவனுக்கு விளைவைக் கொடுக்கும் ஒரு தினமாக தைப்பூசம் இருக்கிறது.

அன்றைய மக்கள் தங்களில் வயலில் கிடைக்கும் அனைத்து விளைச்சலையும் தலைச் சுமையாக சுமந்து வந்து முருகனுக்குப் படைத்து நன்றி செலுத்துவார்கள். மலையில் இருக்கும் முருகனுக்குக் காணிக்கை செலுத்தினர்.

சங்க இலக்கியங்களில் ‘கடி உண் கடவுள்’ என்று இறைவன் குறிப் பிடப்படுகிறான். இங்கு ‘கடி’ என்பது புதியது. ‘உண்’ என்பது உண்ணுகின்ற என்று பொருள். ஆகக் கடவுள் என்பவன் புதியதை உண்ணுகின்ற கடவுள் என்று பொருள்படுகிறான். இந்தக் கூற்றுக்கு ஆதாரமாக பழனியில் இன்னும் ஷர்ப காவடி எடுக்கிறார்கள். விளைச்சலைப் பிற பிராணிகளிடமிருந்து காப்பாற்றுவது ஸ்ர்பம். அதனால் பாம்பை காவடியாக எடுப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.






# இயற்கை விவசாய தற்சார்பை நோக்கிய முக்கிய பயிற்சி பட்டறை

**2018** இல் புதிய வெளிச்சம் மேற்கொண்ட தொடர் செயற்பாடுகளின் சிறப்பாக இந்த வருடம் 2023 ஆம் ஆண்டு தொடராக மூன்று நாள்கள் பயிற்சி பட்டறை ஒன்றை நடாத்த திட்டமிட்டுள்ளது.

அந்த வகையில் இயற்கை விவசாயத்தை மக்களிடம் மேலும் விரிவாகவும் ஆழமாகவும் கொண்டு செல்ல வேண்டிய கடப்பாடு எமக்குள்ளது. குறிப்பாக இன்று இலங்கையில் தோன்றியுள்ள உணவு பற்றாக்குறை அல்லது பஞ்சம் ஏற்படக்கூடிய சூழலை எதிர்கொள்ளக்கூடியவாறாக மக்களிடத்தில் மாற்றங்களை, தன்னம்பிக்கையினை ஏற்படுத்தவேண்டிய கடப்பாடும் எமக்குள்ளது.

அதன் அடிப்படையில் இயற்கை விவசாயம் மூலமாக தற்சார்பு என்ற செயற்திட்டத்தை மேலும் விரிவாக்க மக்களிடத்தே எடுத்துச் செல்லவுள்ளதாகவும், இதன் அடிப்படை நோக்கம், முழுமையாக உணவு தற்சார்பை நோக்கி இலங்கை மக்களை நகர்த்துதல் என்பதாகும் என அவ்வமைப்பு குறிப்பிட்டுள்ளது.

உணவு தற்சார்புக்கு அடிப்படையாக இருப்பது விவசாயம், வேளாண்மையில் கால்நடைவளர்ப்பு, கோழிவளர்ப்பு என்பவற்றையும் இணைத்து ஒருங்கிணைத்த பண்ணையமாக மாற்றுவதன் மூலமாக உணவு தற்சார்பு, பொருளாதார தற்சார்பு ஆகியவற்றை நோக்கி மக்களை முன்னகர்த்தி செல்வது தான் இந்த தொடர் நிகவுகளில் நோக்கம் .

இவ்வாறான செயற்பாடுகளுக்கு ஏதுவாக எம் முன்னே உள்ள வாய்ப்புக்கள் அனைத்தையும் கையிலெடுத்து செயற்பட உள்ளதுடன், முதலில் ஒன்றிணைத்தல், பயிற்சிகள் வழங்குதல் பின்பு அவர்களுக்கு என்ன உதவிகள் தேவையோ அவற்றை அரசதிணைக்களங்களினூடாகவோ, நிறுவனங்களின் மூலமோ, புலம்பெயர்ந்துவாழும் ஈழத்தமிழர்களின் மூலமோ பெற்றுக்கொடுப்பதையும் நோக்கமாகக் கொண்டு செயற்படவுள்ளனர்.

இந்த வருடம் தமிழ் நாட்டிலிருந்து இயற்கை வேளாண் விஞ்ஞானிகளான பாமயன்,சுந்தரராமன் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளார்கள்

பாமயன் – இயற்கை வேளாண் ‘விஞ்ஞானி, தமிழ்நாடு அவர்கள் தமிழ் நாட்டில் கடந்த 30 ஆண்டுகளாக இயற்கை வேளாண்மை, சுற்றுசூழல் பாதுகாப்பு ஆகிய துறைகளில் தொடர்ச்சியாக பயணம் செய்துகொண்டிருப்பவர், இயற்கை சார்ந்த 22 புத்தகங்களை இதுவரை எழுதி வெளியிட்டுள்ளார், அத்துடன் தமிழ் நாட்டிலும் வேறு மாநிலங்களிலும் இயற்கை வேளாண்மை தொடர்பில் சுமார் 20,000 விவசாயிகளுக்கு பயிற்சி அளித்துள்ளார். அமெரிக்க, பங்களாதேஷ் மலேசியா ஆகிய நாடுகளிலும் தொடர்ச்சியான பயிற்சிகளை அளித்துள்ளார். இதைவிட தமிழ்நாட்டில், மாவட்டம் தோறும் மாதிரி இயற்கை வேளாண் பண்ணைகளை உருவாக்கியுள்ளார். இவற்றுக்கெல்லாம் முத்தாய்ப்பாக இந்தியாவிலேயே ஒரு பெரிய முயற்சியாக, கிட்டதட்ட 100 ஏக்கரில்கூட்டு பண்ணை ஒன்றை தொடங்கியுள்ளார்கள், **"Eco village'** என்ற பெயரில், அதாவது 100 பேர் சேர்ந்து 100 ஏக்கரில் அவர்களுக்கு தேவையான ஒரு தற்சார்பு கிராமத்தை ஏற்படுத்தியுள்ளார்கள்.

சுந்தரராமன் – இயற்கை வேளாண் விஞ்ஞானி அவர்கள் சுமார் 40 வருடங்களாக இயற்கை வேளாண் துறையில் பயணம் செய்துகொண்டிருப்பவர். இவரது பண்ணை தான் தமிழ் நாட்டின் முதலாவது இயற்கை வேளாண்மைக்கான ஆய்வுப் பண்ணை என்பது குறிப்பிடத்தக்கது. சுமார் 30,000 இற்கும் மேற்பட்டவர்களுக்கு இதுவரையில் இவர் பயிற்சி அளித்துள்ளார். இயற்கை வழியில் பல உயிரியல் கரைசல்கள், பூட்சி விரட்டிகள் என்பவற்றை கண்டு பிடித்து மக்கள் மத்தியில் கொண்டு சேர்த்து வருபவர். சிறந்த பயிற்சி வழங்குநராக இருந்துவருகிறார்.

ராஜசேகர் – இயற்கை விவசாய யூடியூப் சனல் **SIRKALI TV** தமிழ்நாடு. தமிழ்நாட்டில் இயற்கை விவசாயிகளுக்கான ஊடக தளத்தை அமைத்து கொடுத்ததில் திரு.ராஜசேகர் அவர்கள் தமது ‘இயற்கை விவசாய யூடியூப் சனல் **SIRKALI TV** தமிழ்நாடு’ இன் ஊடாக பெரும்பங்காற்றியுள்ளார். எங்கள் விவசாய உற்பத்திகளுக்கான சந்தைவாய்ப்பை பெருக்கவும், இயற்கை விவசாய தொழில் நூட்ப அறிவை மேம்படுத்தவும், விழிப்புணர்வை அதிகரிக்கவும் தமிழ் நாட்டிலிருந்து திரு ராஜசேகர் அவர்களையும் அழைத்து வருகிறோம். இவர்களினூடாக எங்கள் விவசாயிகளின் வளர்ச்சியை உலகறியச்செய்வதும் நோக்கமாகும்.

நிகால் ரணசிங்க (சகோதர இனத்தவர்) – இயற்கை விவசாய யூடியூப் சனல் **AGRICULTURE NIHAL RANASINGHA,** பயிற்றுனர் குளியாப்பிட்டியை சேர்ந்த நிகால் ரணசிங்க அவர்கள் இயற்கை விவ சாய யூடியூப் சனல் **'AGRICULTURE NIHAL RANASINGHA'** ஒன்றை நடத்திவருபவர். இயற்கை விவசாயத்தில் நீண்டகாலமாக வெற்றிகரமாக ஈடுபட்டு வருபவர். இயற்கை விவசாயப் பயிற்றுனர். இயற்கை விவசாயத்தை பற்றிய பல்வேறு விடயங்களை தனித்துவமாக ஊடகத்தில் வழங்கிவருபவர். சிங்கள மக்களின் இயற்கை விவசாய வெற்றிகளை கொண்டாடிக் கொண்டிருப்பவர். சிங்கள அரசு தனது பிழையான அரசாட்சியால், எந்த விதமான பயிற்சி, வழிகாட்டல், விழிப்புணர்வு எதுவுமே இல்லாமல் இரவோடு இரவாக மக்களை இயற்கை விவசாயத்துக்கு தள்ளியபோது இலவசமாக இயற்கை விவசாய பயிற்சிகளை வழங்கியவர். ‘போக்குவரத்து வசதிகளை வழங்கினால் தான் எங்குவந்தும் இலவசமாக பயிற்றுவிக்கின்றேன்’ என்று பகிரங்கமாக அறிவித்தவர். சிங்களவர்கள் இயற்கை விவசாயத்தில் வெற்றியடைந்ததை பதிவு செய்பவர். மேற் கூறியவர்கள் மூலம் மூன்று நாள் பயிற்சி பட்டறை இடம்பெறவுள்ளதுடன் இதற்கு வருகை தருபவர்கள் இந்த செய்தியில் கீழே குறிப்பிடம் தொடர்பு வகைகளுடன் தொடர்புகொண்டு பயிற்சி பட்டறையில் கலந்துகொண்டு பயன்பெறுங்கள்.
















காலைக்கதிர் வார இதழ் Kalaikkathir

# 2023 ஆங்கிலப் புத்தாண்டு ராசி பலன்கள் இந்த ஆண்டு எப்படி இருக்கும்?




2022 ஆம் ஆண்டு முடிந்து 2023 ஆம் ஆண்டு பிறக்கப்போகிறது. இந்த 2023ஆம் ஆண்டு அனைத்து ராசிகளுக்கு எப்படிப்பட்ட பலன்களை வழங்கும் என்பதை இன்றைய பதிவில் அறியலாம். பொதுவாக அனைவருக்குமே ராசி பலன் படிக்க மிகவும் பிடிக்கும். ஒவ்வொரு நாளுமே இன்றைய நாள் எப்படி இருக்கும், நன்றாக இருக்குமா அல்லது சுமாராக இருக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புவோம். அந்த வகையில் 2023 இன்னும் சில நாள்களில் பிறக்க உள்ளது. இந்த 2023 ஆம் ஆண்டாவது எப்படி இருக்கும் என்ற ஆசை இருக்கும். அப்படி 2023 ஆம் ஆண்டிற்கான புத்தாண்டு ராசி பலன்களை தெரிந்துகொள்ள விரும்பும் நபர் நீங்கள் என்றால், இந்த பதிவு உங்களுக்கானது தான். சரி வாங்க இந்த 2023 ஆண்டு 12 ராசிக்காரர்களுக்கும் எப்படி இருக்கும் என்று பார்க்கலாம்.

**மேஷம்**



மேஷம் ராசிக்காரர்களுக்கு இந்த புதிய வருடம் மிகவும் சிறப்பானதாக இருக்கும். நீங்கள் புதிதாக வேலை தேடிக் கொண்டிருந்தால் உங்களுக்கு நல்ல நிறுவனத்தில் அருமையான சம்பளத்தில் வேலை கிடைக்கும். இந்த 2023 ஆம் ஆண்டு உங்களுக்கு ஒரு புதிய மாற்றம் நிகழும். இருப்பினும் திருமணம் வயதில் இருக்கும் மேஷம் ராசிக்காரர்களுக்கு திருமணம் விடயத்தில் சில அலைச்சல்கள் அல்லது தடங்கல்கள் ஏற்பட்டு உங்களுக்கு இந்த ஆண்டு திருமணம் நடக்கும். திருமணமானவர்களுக்கு இந்த ஆண்டு உங்கள் உறவுக்குள் எந்த ஒரு பிரச்சனையும் இருக்காது என்றாலும் தேவையில்லாத விடயங்களை பேசுவதை முற்றிலும் தவிர்ப்பது மிகவும் நல்லது. ஆரோக்கியம் பொறுத்தவரை இந்த வருடம் உங்கள் உடல் நலம் நன்றாக இருக்கும். மேலும் நிதிநிலை பொறுத்தவரை இந்த ஆண்டு உங்களுக்கு வளர்ச்சிகரமாக இருக்கும். குறிப்பாக இந்த ஆண்டு மேம் ராசியில் பிறந்த சிலர் சொத்துக்களை வாங்க அதிக வாய்ப்புகள் உள்ளது.

**ரிஷபம்**



ரிஷபம் ராசிக்காரர்கள் இந்த 2023 ஆம் ஆண்டு ஒரு அதிர்ஷ்டத்தை அனுபவிக்க கூடிய ராசிக்காரர்கள் என்று சொல்லலாம். உங்கள் ஜாதகத்தில் தசா புத்திகள் சிறப்பாக அமைந்திருப்பதால் இந்த ஆண்டு உங்களுக்கு மிக சிறப்பானதாக அமையும். தொழில் மற்றும் உத்தியோகம் பொறுத்தவரை இந்த ஆண்டு நீங்கள் எந்த வியத்தையும் தைரியமாக செய்யலாம் உங்களுக்கு முழுமையான வெற்றிகள் கிடைக்க கூடும். ரிஷபம் ராசிக்காரர்கள் உங்கள் திருமணத்தை முடிந்தளவு மே மாதத்திற்குள் செய்துகொள்ளுங்கள். இவ்வாறு செய்வதினால் திருமணத்தில் உங்களுக்கு எந்த ஒரு தடைகளும் இன்றி சிறப்பாக நடந்து முடியும். மேலும் திருமணம் ஆனவர்களுக்கு அவர்களது திருமண வாழ்க்கையும் 2023 ஆம் ஆண்டு நிம்மதியானதாக இருக்கும். ஆரோக்கியமும் சிறப்பாக இருக்கும். குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும். மாண வர்களும் 2023 ஆம் ஆண்டு கல்வியில் சிறந்து விளங்குவார்கள். மேலும் நிதிநிலை பொறுத்தவரை பணம் வரவு உங்களுக்கு.

**மிதுனம்**



மிதுனம் ராசிக்காரர்களுக்கு இந்த ஆண்டு ஆரோக்கியம் நன்றாக இருக்கும். உங்கள் பொருளாதாரம் இந்த ஆண்டு நன்கு வளர்ச்சிகரமாக இருக்கும். ஆக இந்த ஆண்டு உங்கள் கடன் தொல்லையில் இருந்து விடுபடுவீர்கள். மேலும் தொழில் மற்றும் உத்தியோகம் நிம்மதியானதாக இருக்கும். திருமணம் வாழ்க்கை பொறுத்தவரை கணவன் மனைவி உறவுக்குள் இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் அனைத்தும் நீங்கும். திருமணம் ஆகாதவர்களுக்கு இந்த ஆண்டு நல்ல இடத்தில் நல்ல வரன் அமையும். குழந்தை இல்லாதவர்களுக்கு இந்த ஆண்டு குழந்தை பிறக்கும். மாணவர்கள் கல்வியில் நல்ல முன்னேற்றம் அடைவார்கள்.

**கடகம்**



கடகம் ராசிக்காரர்கள் இந்த ஆண்டு அனைத்து வியத்திலும் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். இந்த ஆண்டு திருமணத்தில் சில தடைகள் ஏற்படும். திருமணம் வாழ்க்கையை பொறுத்தவரை கணவன் மனைவி உறவுக்குள் ஒருவரை ஒருவர் விட்டுக் கொடுத்து செல்வது மிகவும் நல்லது. மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்கினாலும், எதிர்பாராத சில விடயங்களில் பிரச்சினைகள் வரக்கூடும் ஆக நீங்கள் உண்டு உங்கள் படிப்பு உண்டு என்று இருப்பது மிகவும் சிறந் தது. பொருளாதாரம் நிதிநிலை பொறுத்தவரை கடகம் ராசிக்காரர்களுக்கு இந்த ஆண்டு பணம் வரவு உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய போதுமான அளவு இருக்கும். மேலும் ஆரோக்கியத்தில் இந்த ஆண்டு கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டும்.

**சிம்மம்**



இந்த ஆண்டு சிம்மம் ராசிக்காரர்களுக்கு ஓரளவு நல்ல ஆண்டாக தான் இருக்கும். குறிப்பாக 2023 ஆம் ஆண்டு வேலை, தொழில், பணம், முன்னேற்றம், பயணங்கள் இவை எல்லாம் வளர்ச்சிகரமாக இருக்கும். திருமணம் வயதில் இருப்பவர்களுக்கு நல்ல இடத்தில் திருமணம் நிச்சகிக்கப்படும். திருமணம் ஆனவர்களுக்கு 50% நன்றாக இருக்கும் 50% பிரச்சினையாக இருக்கும். இருப்பினும் இந்த ஆண்டு உங்கள் ஆரோக்கியத்தில் அதிக கவ னம் செலுத்த வேண்டும். குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தை பாக்கி யம் கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் அதிக கவனம் செலுத்தினால் நல்ல முன்னேற்றத்தை பெற முடியும். பொருளாதார நிலை பொறுத்தவரை வீண் செலவுகள் எதுவும் இருக்காது, இருப்பினும் அதிக சுப செலவுகள் உண்டாகும்.

**கன்னி**



கன்னி ராசிக்காரர்கள் புதனை ராசிநாதனாக கொண்டவர்கள். இந்த ஆண்டு உங்களுக்கு சில பிரச்சனைகள் வந்தாலும் அதனை எதிர்கொள்ளம் திறன் உங்களிடம் இருக்கும். ஆக அந்த பிரச்சனைகளை எளிதாக சமாளித்துவிடுவீர்கள். கொடுப்பதில் மகிழ்ச்சி இருக்கும். உங்கள் இல்லறவாழ்க்கையும் சிறப்பாக இருக்கும். உங்களது கஷ்டங்கள் இந்த ஆண்டு பலமிழந்து போகும். உத்தியோகத்தில் நீங்கள் எதிர்பாத்த பதவி உயர்வு கிடைக்கும். உங்கள் பொருளாதாரத்தில் எந்த ஒரு பிரச்சினைகளும் இருக்காது. மாணவர்கள் படிப்பில் அதிக ஹாட் ஒர்க் செய்து நல்ல மதிப்பெண்கள் பெறுவார்கள்.

**துலாம்**



சுக்கிரனை ராசிநாதனாகக் கொண்ட துலாம் ராசிகாரர்களுக்கு இந்த ஆண்டு உங்கள் குடும்பத்தில் என்றும் மகிழ்ச்சி இருந்து கொண்டே இருக்கும். உங்கள் வீட்டு நிதிநிலை வளர்ச்சிகரமாக இருக்கும். வேலை தேடுபவர்களுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்க வாய்ப்பு உள்ளது. கணவன் மனைவி உறவுக்குள் எந்த ஒரு பிரச்சினைகளும் ஏற்படாது. உத்தியோகத்தில் உங்கள் உண்டு உங்கள் வேலை உண்டு என்று இருப்பது நல்லது. வியாபாரிகளுக்கு அளவான லாபம் கிடைக்கும். குறிப்பாக இந்த ஆண்டு குடும்ப நலம், தொழில் வளம், பதவி உயர்வு போன்ற நற்பலன்கள் உண்டாகும்.

**விருச்சிகம்**



விருச்சிகம் ராசிக்காரர்கள் செவ்வாயை ராசிநாதனாக கொண்டவர்கள். இவர்களுக்கு இந்த ஆண்டு நல்ல பலன்கள் கிடைக்க கூடும். செல்வவளம் நன்றாக இருக்கும். திருமணம் வயதில் இருப்பவர்களுக்கு திருமணம் கைகூடிவரும். இந்த ஆண்டு உங்கள் குடும்பத்தில் சுபகாரியம் ஒன்று நடக்கலாம். மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவார்கள். கணவன் மனைவி உறவுக்குள் விட்டுக்கொடுத்து செல்வது நல்லது. மேலும் உங்கள் ஆரோக்கியம் இந்த வருடம் நன்றாக இருக்கும். தொழில் மற்றும் உத்தியோகத்தில் வளர்ச்சி அடைவீர்கள் மேலும் அதன் மூலம் நல்ல லாபமும் கிடைக்க கூடும்.

**தனுசு**



குருவை ராசிநாதனாகக் கொண்ட தனுசு ராசிக்காரர்களுக்கு இந்த ஆண்டு உங்களுக்கு பொருளாதரம் வளர்ச்சிகரமாக இருக்கும். பிள்ளைகள் கல்வியில் சிறந்து விளங்குவார்கள். புத்தி தொழிலை இந்த ஆண்டு நீங்கள் தொடங்கினால் அதில் வெற்றி பெறுவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் உங்கள் திறமைகளை கண்டு வியந்துபோவார்கள். கணவன் மனைவி உறவுக்குள் உற்றுமை அதிகம் இருக்கும். இருப்பினும் இந்த ஆண்டு ஆரோக்கியத்தில் மற்றும் அதிக கவனம் செலுத்த வேண்டும். இந்த ஆண்டு பணி தொடர்பாக அதிக பயணங்கள் இருக்கும். இந்த ஆண்டு உங்களுக்கு வளர்ச்சிகரமான நாளாக இருக்கும்.

**மகரம்**



மகரம் ராசிக்காரர்களுக்கு இந்த ஆண்டு வளர்ச்சிகரமாக இருக்கும். உங்களை விட்டு விலகி சென்றவர்கள் இப்பொழுது நெருங்கி வருவார்கள். குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். வேலை தேடிக்கொண்டிருப்பவர்களுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்கும். வீட்டின் தேவைகளை இந்த ஆண்டு பூர்த்தி செய்வீர்கள். கணவன் மனைவி உறவுக்குள் சில கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு நீங்கும். கணவர்கள் கல்வியில் அதிக கவனம் செலுத்த வேண்டும். நிதிநிலை பொறுத்தவரை உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யும் அளவிற்கு பணம் வரவு கிடைக்கும்.

**கும்பம்**



சனியை ராசிநாதனாகக் கொண்ட உங்களுக்கு இந்த ஆண்டு முன்னேற்றகரமான நாளாக இருக்கும். உங்கள் பணிகளில் அதிக கவனம் செலுத்துவீர்கள். வியாபாரிகளுக்கு எதிர்பார்த்த லாபம் இருக்காது ஆக சிந்தித்து செயல்படுவது நல்லது. வீட்டில் மகிழ்ச்சி நிலைத்திருக்கும். கணவன் மனைவி உறவுக்குள் சில கருத்துவேறுபாடுகள் அவ்வப்போது ஏற்பட்டு நீங்கும். பெண்களுக்கு குடும்பத்தில் சிறு குழப்பங்கள் ஏற்பட்டாலும் அவை தானகவே நிவர்த்தியாகிவிடும். மாணவர்களை பொறுத்தவரை ஒருமுறைக்குப் பலமுறை பாடங்களை படிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

**மீனம்**



மீனம் ராசிக்காரர்கள் புதனை ராசிநாதனாகக் கொண்டவர்கள் ஆவார். உங்களுக்கு இந்த ஆண்டு பலவிதமான சங்கடங்கள் வந்தாலும் மனோதிடத்துடன் அதனை வென்று வெற்றி பெறுவீர்கள். இந்த ஆண்டின் ஆரம்பம் தங்களுக்கு மிகவும் சோதனையாக இருக்கலாம். உங்களுக்கு பல பிரச்சினைகள், தோல்விகள் மற்றும் ஏமாற்றங்கள் ஏற்படலாம். உங்கள் வளர்ச்சியை பாதிக்கும் வகையில் உங்கள் மீது பலர் பொறாமைப் படுவார்கள் மேலும் உங்கள் மீது கண் திருஷ்டியும் இருக்கும். கணவன் மனைவி உறவுக்குள் நல்ல புரிதல் இருக்கும். ஒருவரை ஒருவர் விட்டுக் கொடுத்து செல்வீர்கள். மாணவர்கள் இந்த ஆண்டு கல்வியில் கொஞ்சம் மந்தமாக தான் இருப்பார்கள்.

# எமது தேசத்தை விழிப்படைய செய்யும் இறைவா! வரும் 2023 ஜனவரி 08 தேசிய கூக்குரல் தினம்

## அன்றைய நாளை தேசிய பிரார்த்தனை தினமாக அனுஷ்டிக்க இலங்கை கத்தோலிக்க தேசிய ஆயர்கள் பேரவை அழைப்பு

2023 ஜனவரி 08ஆம் திகதி தொடக்கம் பாஸ்கா விழா வரைக்கும் ஒவ்வொரு ஞாயிறும் பங்கின் பிரதான தேவாலயங்களில் தேவ நற்கருணையை எழுந்தேற்றம் செய்து நாட்டுக்காக உயிருள்ள இறைவனிடம் மன்றாடவும் வேண்டுதல் விடுக்கப்பட்டுள்ளது.

எமது தாய் நாட்டின் பொருளாதார ரீதியாக மட்டுமல்ல அரசியல் மற்றும் விழுமியங்கள் என்ற அடிப்படையில் வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது. அது தானாக நடைபெற்ற விடயம் அல்ல.

அது இந்நாட்டை ஆட்சி செய்த, ஆட்சி செய்கின்ற மற்றும் ஒரு சில அரச உத்தியோகஸ்தர்களின் துஷ்பிரயோகம், நாசகாரத் தன்மை மற்றும் தளர்ந்த முகாமைத்துவம் என்பவற்றினால் ஏற்பட்டதாகும். அத்தோடு பாரிய வியாபாரிகளும் இதில் பங்குதாரர்கள் ஆவர்.

இதன் காரணமாக உணவு, மருந்து வகைகள் மற்றும் எரிபொருள் போன்ற அத்தியாவசிய பொருள்களின் விலைகள் அதிகரித்ததோடு தாம் உழைக்கின்ற ஊதியம் அல்லது வேதனம் அதிகரிக்கப்படாத காரணத்தினால் வாழ்க்கை செலவு தாங்கிக்கொள்ள முடியாத அளவிற்கு மக்களுக்கு பாரமாக உள்ளது.

பால் மாவின் விலை அதிகரிப்பின் காரணமாக சிறு பிள்ளைகள் பெரிதும் துயரப்படுகின்றனர். மந்த போசணைக்கு உட்படும் வீதம் அதிகரித்துள்ளது, மின்சாரம் மற்றும் குடிதண்ணீர்க் கட்டணங்கள் தாங்கிக் கொள்ள முடியாத அளவிற்கு அதிகரித்துள்ளது. வரி அதிகரிப்பின் காரணமாக நேரடியாகவும் மறைமுகமாகவும் சாதாரண மக்களின் வாழ்க்கைச் செலவு கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

தேசிய சிறு தொழிற்சாலைகள் மற்றும் வியாபார ஸ்தாபனங்கள் மூடப்பட்ட நிலையில் அதில் தொழில் புரிந்தவர்கள் தமது தொழிலை இழக்கவேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. அத்தோடு நாட்டில் தற்போது அதிகரித்து செல்கின்ற மனிதப் படுகொலைகள், திருட்டுச் சம்பவங்கள் மற்றும் போதைப்பொருள் பாவனை போன்ற காரணங்களால் மக்களின் அன்றாட வாழ்க்கை மிகவும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது என்பது அனைவரும் அறிந்ததே.

இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களின் கூக்குரலை எமது அன்பு,கருணை நிறைந்த கடவுளிடம் வேண்டப்பட்டு தற்போது இருக்கின்ற துஷ்பிரயோக அரசியல் கலாசாரத்தையும் துஷ்பிரயோக அரச உத்தியோகஸ்தர்களினதும் மாற்றத்தை ஏற்படுத்தி, எமது தாய்நாட்டில் அனைவருக்கும் சமாதானம் மற்றும் சந்தோசமாக வாழ்வதற்கு ஒரு சிறந்த இடமாக அமைவதற்காக எமக்கு தேவையான சக்தியும் தைரியமும் தேவையான வழிகாட்டல் மற்றும் ஆசீர்வாதத்தையும் பெற்றுத்தரும்படி நாம் அனைவரும் இலங்கையர் என்ற வகையில் பிரார்த்திப்போம்.

அதற்கான ஆரம்ப கட்டமாக ஆண்டவரின் திருக்காட்சி பெருவிழா கொண்டாடும் தினமான 2023 ஜனவரி 08ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேசிய பிரார்த்தனை தினமாக நியமிப்பதற்கு தேசிய ஆயர்கள் பேரவை தீர்மானித்துள்ளது. அன்று தேசிய கூக்குரல் தினம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதோடு அன்றைய கருப்பொருள் 'எமது தேசத்தை விழிப்படைய செய்யும் இறைவா!' என்பதாகும்.

அன்றைய தினம் எமது அனைத்து பங்குகளின் பிரதான ஆலயங்களிலும் காலை 08.00 மணி திருப்பலியில் -

(01) நாட்டில் துன்பப்படுகின்ற மக்களுக்காகவும் நாட்டின் அபிவிருத்திக்காகவும் விசுவாசிகளை தொடர்ச்சியாக ஊக்குவித்தல்.

(02) அன்று தொடக்கம் பாஸ்கா விழா வரைக்கும் ஒவ்வொரு ஞாயிறும் பங்கின் பிரதான தேவாலயங்களில் தேவ நற்கருணையை எழுந்தேற்றம் செய்து நாட்டுக்காக உயிருள்ள இறைவனிடம் மன்றாடுவதற்காக விசுவாசிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கல்.

(03) திருப்பலியின் பின்பு நாட்டுக்காக தேவ தாயாரிடம் பக்தியோடு விசுவாசிகளோடு இணைந்து மன்றாடுதல்.

(04) மாதத்தில் ஒருமுறை ஜெபமாலை பிராரத்தனை பங்கு மட்டத்தில் ஏற்பாடு செய்தல்.

போன்ற பணிகளை மேற்கொள்ள இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை அனைத்து பங்கு தந்தையர்களிடமும் கேட்டுக்கொள்கின்றது.

கிறிஸ்து பிறப்பு பெருவிழா இனங்களுக்கும் மதங்களுக்கும் இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டிய பெருவிழாவாகும்.

காலைக்கதிர் Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
கிறிஸ்தவ செய்தி

# தேவ அன்னையின் பாதுகாப்பில் நம்பிக்கை வைத்து 2023 ஆம் ஆண்டைத் தொடங்க ஆயர் கோரிக்கை



இந்த ஆண்டு முழுவதும் என்ன நடந்தாலும் நான் ஆண்டவரின் அடிமை, உமது சொற்படியே எனக்கு நிகழட்டும் என மனதில் அடிக்கடி சொல்லிச் செபியுங்கள். இந்த வார்த்தைகளே இந்த ஆண்டு முழுவதும் உங்கள் அனைவரையும் வழிநடத்தும் வார்த்தைகளாகட்டும் என யாழ்ப்பாணம் ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் புதுவருட வாழ்த்து செய்தியில் அழைப்பு விடுத்துள்ளார்.

ஆயர் தன் செய்தியில் 2023ஆவது புதிய ஆண்டு மலருகின்ற வேளை இப்புத்தாண்டைக் கொண்டாடும் அனைவருக்கும் நீங்கள் உலகின் எப்பாகத்தில் இருந்தாலும் இப்புதிய ஆண்டு உங்கள் உள்ளத்து எண்ணங்கள், ஏக்கங்கள் அனைத்தையும் நிறைவு செய்யும் இறை ஆசீர் மிக்க ஆண்டாக அமைய முதலில் வாழ்த்துகிறோம்.

உலகக் கத்தோலிக்க திருஅவையானது ஒவ்வொரு ஆண்டின் முதல் தினத்தையும் தேவ அன்னையின் தினமாகப் பிரகடனப்படுத்தி அன்றைய தினத்தில் அந்த புதிய ஆண்டு முழுவதிற்குமான தேவ அன்னையின் தாய்க்குரிய அன்பையும் பாசமிகு பராமரிப்பையும் வல்லமை மிக்க இறை பாதுகாப்பையும் பெற செபிக்கும்படி பணித்து நிற்கிறது.

நான் ஆண்டவரின் அடிமை உமது சொற்படியே எனக்கு நிகழட்டும் (லூக்கா1:38) என்று தேவ அன்னை இறைசித்தத்தை ஏற்று பல இன்ப துன்ப அனுபவங்கள் வழி தன் அர்ப்பண வாழ்வை வாழ்ந்து இறைவனின் தாயாகவும் இறை மக்களின் தாயாகவும் விளங்கும் பாக்கியம் பெற்றவர்.

இன்று உலக மக்கள் அனைவரையும் தன் அன்பு மக்களாக அரவணைத்துப் பாதுகாத்துப் பாரமரித்து வருகிறாள்.

கடந்த 2022ஆம் ஆண்டு ஆண்டு பல இன்பமான அனுபவங்கள் வழியும், பல துன்பமான அனுபவங்கள் வழியும் எம்மை அழைத்துச் சென்று தன் பயணத்தை முடித்து எம்மை விட்டுக் கடந்து சென்று விட்டது.

மலர்கின்ற 2023ஆம் புதிய ஆண்டு எப்படி அமையுமோ என்ற ஏக்கமும், இனியதாய் அமைய வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் எம் எல்லோர் மனதுகளிலும் நிறையவே உண்டு. 2023ஆம் ஆண்டை தேவ அன்னையின் பாதுகாப்பில் நம்பிக்கை வைத்து தொடங்குங்கள். இப்புதிய ஆண்டு முழுவதும் தேவ அன்னை தன் தாய்க்குரிய அன்போடும் பாசத்தோடும் எம்மைப் பாதுகாப்பாள் என்ற நம்பிக்கை உங்கள் மனதில் நிறைந்திருக்கட்டும்.

தேவ தாயை எப்போதும் எங்கிருந்தாலும், என்ன நடந்தாலும், உங்கள் அன்னையாக மனதிலிருத்தி என்ன செய்தாலும் அன்னையின் துணையுடன் செய்யுங்கள். அன்னை வெற்றியையே பெற்றுத் தருவாள்.

இந்த ஆண்டு முழுவதும் என்ன நடந்தாலும் நான் ஆண்டவரின் அடிமை, உமது சொற்படியே எனக்கு நிகழட்டும் என மனதில் அடிக்கடி சொல்லிச் செபியுங்கள். இந்த வார்த்தைகளே இந்த ஆண்டு முழுவதும் உங்கள் அனைவரையும் வழிநடத்தும் வார்த்தைகளாகட்டும்.

இறைவனின் அன்னையும், இறைமக்களின் அன்னையுமான தேவ அன்னை தாய்க்குரிய அன்போடு எம் அனைவரையும் இவ்வாண்டு முழுவதும் எத்தீங்குமின்றி பாதுகாத்து,வழிநடத்தி, எம் அனைத்துத் தேவைகளிலும் உடனிருந்து நிறைவு செய்ய, இறை யாசீர் மிக்க வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம்.

- யாழ் ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தமது வாழ்த்துச் செய்தியில் மேற்கூறியவாறு தெரிவித்துள்ளார்.

## ஓய்வு நிலை திருத்தந்தை 16ஆம் பெனடிக்றின் ஆன்ம இளைப்பாற்றிக்காச் செபிக்க அழைப்பு




ஓய்வு நிலை திருத்தந்தை 16 ஆவது பெனடிக்ற் தனது 95 ஆவது வயதில் நோயால் நேற்று 31டிசெம்பர் 2022 அன்று காலமானார்.

திருத்தந்தை பிரான்சீஸ் அவர்கள் ஓய்வு நிலை திருத்தந்தை 16 ஆவது பெனடிக்ற் அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காச் செபிக்க அழைப்பு விடுத்துள்ளார்.

கத்தோலிக்க திருச்சபை வரலாற்றில் இரண்டு திருத்தந்தையர்கள் ஒரே நேரத்தில் இருந்தார்கள் என்பது 600 ஆண்டுகளாக நடைபெறாத சம்பவம் என்ற சரித்திரமம் நிறைவானது.

தமது முதிர்ந்த வயது காரணமாகவும் உடல்நலக் குறைவு காரணமாகவும் தாம் திருத்தந்தைப் பணியைத் 2013 பெப்ரவரி 28ஆம் நாள் துறக்கப் போவதாக திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் அவர்கள் வெளியிட்ட செய்தி உலகக் கத்தோலிக்க திருச்சபையைப் பொறுத்தவரை ஒரு மிக அதிர்ச்சியான செய்தியாக அமைந்தது. 600 ஆண்டுகளுக்கு மேலாக இவ்வாறு ஒரு திருத்தந்தை பணியிலிருந்து விலகியதில்லை என்பதோடு திருத்தந்தைப் பதவி வாழ்நாள் முழுவதற்கும் நீடிக்கும் ஒரு பதவி எனபதே வழக்கம். திருத்தந்தையின் இறப்புக்குப் பின்னர்தான் புதிய திருத்தந்தை தேர்ந்தெடுக்கப்படுவர்.

இரு திருத்தந்தையர்களின் சந்திப்புப்பற்றிய முத்திரை ஒன்றை வத்திக்கான் வெளியிட்டுள்ளது.




**காலைக்கதிர் காலை மற்றும் மாலை இணையப் பத்திரிகையின் காலைக்கதிர் குடும்பத்திற்கும், அதன் அனைத்து வாசக அன்பர்களுக்கும், கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்களின் 2023ஆம் புத்தாண்டு பெருவிழா வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.**

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 229

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## விருப்பத்தின் இயலாமைகளுக்கான பிம்பங்கள்

நாட்டின் தமிழ் மக்களுக்கான தேசிய இயக்கம் ஒன்று எழும் என்பது 1956 இல் சிங்களம் மட்டும் சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பொழுதே அங்கு பேசப்பட்டது.

தமிழரசு கட்சியின் வன்னியசிங்கம் "இது இலங்கையின் ஒற்றையாட்சியை முடித்து வைக்கும் முதல் படி" என்றும் –

இடதுசாரியான லெஸ்லி குணவர்தன "இந்தச் சட்டம் அமுலானால் தமிழ் மக்கள் நாட்டில் இருந்து பிரிந்து போவதைத் தடுக்க முடியாது" என்றும் –

யாவர்க்கும் மேலாக சுந்தரலிங்கம் "தமிழ் மக்கள் சிங்களம் படிப்பதற்கு முன்னால், துப்பாக்கிகளை பாவிப்பதற்குக் கற்றுக் கொண்டு விடுவார்கள். அதைப் பற்றி யாரும் சந்தேகம் கொள்ள வேண்டாம்" என்றும் – கூறினர்.


"இரு மொழிகள் என்றால் ஒரு நாடு; ஒரு மொழி ஆனால் இரண்டு நாடு!" என பகிரங்கமாக பல இடங்களில் பேசிய



பண்டா - செல்வா ஒப்பந்தத்தைக் கிழித்தெறிய வைத்த கண்டி பாத யாத்திரையில் அதன் சூத்திரதாரி ஜே.ஆர்.

கொல்வின் ஆர்.டி.சில்வா பின்னர் ஸ்ரீமாவோ அரசுடன் இணைந்து, சிறுபான்மையினரின் உரிமைகளை உறுதிப்படுத்திய ஏற்பாடுகளைக் களைந்து 1972 ஆம் ஆண்டின் அரசமைப்பை உருவாக்கினார்.

பேரினவாதிகள் தங்களது பெரும்பான்மையால் நாட்டின் அதிகாரங்கள் யாவற்றையும் தங்கள் கைகளில் வைத்திருக்கிறார்கள் என்ற யதார்த்தமே தமிழரசு கட்சியினர் சமஷ்டி அமைப்புக்காக வைத்த பிரேரணைகளை கொல்வின் ஆர் டி சில்வா இணைந்திருந்த இடதுசாரி கட்சிகள் கூட நாடாளுமன்றத்தில் நிராகரித்தன. எந்த இணக்கத்திலும் அதிகாரங்களை கையகப்படுத்தி வைத்திருக்கும் பெரும்பான்மை மனோபாவங்கள் அதனை கட்டுப்படுத்துவதை உணர்ந்து கொள்ள



பண்டா - செல்வா ஒப்பந்த சமயம்

வேண்டும்.

1957 இல் செல்வநாயகம் – பண்டாரநாயக்காவுடனான ஒப்பந்தத்தை ஏற்படுத்திய போது, வட்டுக்கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை; ஆயுதக் குழுக்களின் அவசியமே தோன்றவில்லை. முன்னறிவிப்பாக தெரிவிக்கப்பட்ட தேசிய இயக்கமும் இருக்கவில்லை.

நான் இங்கு விடுதலைப் புலிகளை குறிப்பிடுகிறேன்.

இந்த பண்டா – செல்வா ஒப்பந்தத்தில், தமிழரசு கட்சியினர் அரசியல் அதிகார பரவலாக்கலைப் பிராந்திய வலய அமைப்புக்களில் ஏற்க முன் வந்தார்கள். இந்த அரசியல் அதிகார பரவலாக்கம், மத்தியில் அமைந்த அரசில் குவிந்திருந்த அதிகாரங்களை சிறிது குறைக்க உதவியதே தவிர, இரண்டு தேசங்கள் என்ற அடிப்படையில் தேசஎல்லைகளின் வரம்புகளும் குறுக்கிடும் போது, அந்த தேசத்துக்கென அந்த பிராந்திய அலகுக்கு இருக்கும் அதிகாரங்கள், மத்திய அரசினால் எப்படி கணிக்கப்படும் என்பவை உள்ளடக்கப்படவில்லை. அதே சமயம் அந்தப் பிராந்தியத்தில் பகிர்ந்து அளிக்கப்படும் காணிகளின் தேர்விலும், அது கையளிக்கப்படுபவர்களின் பட்டியல்களிலும், பிராந்திய அலகு அதன் அதிகாரங்கள் பங்குபற்றலாம் எனவும், அதில் பணிக்கு அமர்த்தப்படுபவர்களைத் தெரிவு செய்யும் அதிகாரமும் பெற்றுக் கொள்ளப்பட்டது. இணங்கிக் கொள்ளப்பட்ட மற்றைய முக்கியமான அம்சம் சிங்கள – தமிழ் மொழி இரண்டுக்கும் சம உரிமைகள் தருவது என்பது. அதாவது தமிழ்த் தேசிய ரீதியில் சிறுபான்மையினரின் மொழி எனவும், வடக்கு – கிழக்கு மாகாணங்களில் அரச கரும மொழியாக அமுல் படுத்தப்படும் என்பதும் ஆகும்.

பின்னோக்கிப் பார்த்தால், சிங்களப் பேரினவாதம் தமிழ் தேசத்தை ஏற்றுக் கொண்டாலும், அதனை அங்கீகரித்து அமல்படுத்த விரும்பவில்லை.மறுத்தது. இந்த பிணக்கத்துக்காக தமிழரசு கட்சி சமஷ்டிக் கோரிக்கையை கைவிட ஒத்துக் கொண்டது. ஏனெனில் பிரதமர் பண்டாரநாயக்காவால் சமஷ்டி அமைப்பிலான அரசமைப்பையோ அன்றில் பிராந்திய சுயாட்சிசையோ அரசியல் சூழ்நிலைகளால் தர இயலாது என்பதை தமிழரசு கட்சி உணர்ந்து கொண்டமைதான்.

இந்த அதிகாரப் பரவலாக்கலில் பெரும்பான்மை தனது மேலோங்கிய அதிகாரத்தைப் பாதுகாத்தது மட்டுமல்லாமல், பிராந்திய அதிகாரம் தனக்கு எதிராக எந்தத் தடுப்பதிகாரமும் மேற்கொள்ளாத வாறும் பார்த்துக் கொண்டது.

அதிகாரங்கள் பிராந்திய நிலையில் பரவலாக்கப்படும் என்பது முன்னேற்றமானது, வெற்றியானது என தமிழ் மக்களிடையே பிரச்சாரப்படுத்தப்பட்டது.

ஆனால் ஜே.ஆர். தொடங்கிய அரசியல் எதிர்ப்பு நடைப்பயணங்களால் பண்டா – செல்வா ஒப்பந்தம் கிழித்தறியப்பட்டது.

அதனை தமிழரசு கட்சி செய்ய



ஜெனிவாப் பேச்சு

வில்லை பண்டாரநாயக்காகவே செய்தார்.

ஆனால் தேர்தல் வெற்றிகளுக்காக பண்டாரநாயக்காகவின் கட்சி, ஒப்பந்தத்தை குழப்பியது ஜே.ஆரின் ஐக்கிய தேசியக் கட்சியென நீலி கண்ணீர் வடித்து. அதில் சில ஆதாயங்கள் பெற்று வெற்றி பெற்றாலும், தொடர்ந்தும் தமிழ் மக்களுக்கு விரோதமான கொள்கைகளே முன்னெடுக்கப்பட்டன.

இவற்றால் தமிழ் மக்களது பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு தருவேன் என அரசியல் ஆதாயம் பெற்று, ஜனாதிபதியான ஜே ஆர் தந்தது மாவட்ட சபை அமைப்பு முறை. இதனைக் கூட்டணி ஏற்று ,அதிலிருந்து முன்னேறலாம் என எதிர்பார்த்தது. இந்தக் காலங்களில் விடுதலைக் குழுக்கள் வளர்ச்சி பெற்றிருந்தன. ஜே.ஆர். பிரகடனப்படுத்திய பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் பாராது அவர்கள் வளர்ந்து, பின்னாளில் விடுதலைப்புலிகள் தமிழ் மக்களின் தேசியத்தை ஆயுத ரீதியில் முன்னெடுத்தார்கள். அவர்கள் தான் சிங்களப் பேராண்மையின் அடக்குமுறைக்கு எதிராக தாக்குப்பிடித்து, தங்களிடமிருந்து இராணுவ பலத்தால், சிங்கள அரசை இரு தேசங்களின் பிரதிநிதிகள் என்ற சமத்துவ நிலையில் பேச்சுவார்த்தைக்கு நிர்ப்பந்தப்படுத்தச் செய்தனர். அந்த இராணுவப் பலம் தங்களுக்கு எதிரான பலமான சக்தி என்பதை தெளிவாகக் கணக்கிட்ட சிங்களப் பேராண்மை அதை அழிப்பதில் கவனம் செலுத்தி, வெற்றியும் கண்டு, தமிழ் மக்களின் எந்த நியாயமான அரசியல் கோரிக்கையையும் அலட்சியம் செய்து, 13 வருடங்கள் தாண்டி, பொருளாதார நெருக்கடிகளால் இனப்பிரச்சனைக்கு




தாய்லாந்துப் பேச்சு

தீர்வு என பேச்சு வார்த்தைகளுக்கு அழைத்துள்ளது.

வியூகங்களைக் கணித்தால் நாட்டில் விடுதலைப் புலிகளின் இராணுவப் பலம் அழிக்கப்பட்டு அவர்கள் ஓரம்கட்டப்பட்டுள்ளார்கள். பண்டா – செல்வா ஒப்பந்த தொடக்க நாள்களில் இருந்தது போல் இரண்டு தேசங்கள் என்று அடிப்படைகளில் அமையாது, ஒற்றை ஆட்சியின் கீழ் அதிகார விரிவாக்கம் என்றே சிங்கள தரப்பினரின் பேச்சுக்கள் உள்ளன.

எதையும் தன்னுடைய அதிகாரங்களால் தர முடியாத சூழ்நிலைகளில் பேரினவாதிகளின் ஆளுமையிலே ஜனாதிபதி ரணிலும் 1957 பண்டாரநாயக்கா இருந்த நிலையிலேயே உள்ளார்.

எவையானாலும் விட்டுக் கொடுப்பு, தமிழ் பரப்புகள் தர வேண்டும், அவர்களது கோரிக்கைகள், இரண்டு தேசங்கள் இணைந்து ஏற்படுத்தும் அதிகார பகிர்வாகவோ அன்றில் ஒரு நாட்டினில் அமைந்த சுயாட்சியாகவோ, இல்லாது பழமையான மத்திய அரசின் அதிகாரத்தில் அமையும் நிர்வாக அலகுகளை ஏற்று நடத்துவதாக இருக்க வேண்டும். பழையன போல் பேச்சுவார்த்தைகள் என்பன சர்வதேசத்திற்கான படங்களாகவும் அதிகார நடைமுறைகளுக்கான ஏற்பட்டுள்ள வலயங்களை கையளிப்பதாகத் தான் அமையலாம்.

இங்கு திரும்ப இந்தியா ஒப்பந்தத்தின் கருத்துக்களை, விடுதலைப் புலிகளின் புத்திஜீவுகள் அவர்களின் பார்வையில் புரிந்து கொள்ளவும் வேண்டும்.

(வளரும்....)

காலைக்கதிர் Kalaikkathir

## உள்ளூராட்சித் தேர்தல் ....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கமைய உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இனியும் பிற்போட முடியாது. தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு கடந்த செப்டெம்பர் 20 ஆம் திகதி உரித்தாக்கப்பட்டது. தேர்தலை நடத்துவதற்கானதொழில்நுட்பமட்டநடவடிக்கைகளை ஆணைக்குழு முன்னெடுத்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான கடமைகளுக்காக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு கடந்த மாதம் (டிசெம்பர்) தேர்தல் மாவட்டங்களுக்கான தெரிவத்தாட்சி உறுப்பினர்கள் மற்றும் உதவி தெரிவத்தாட்சி உறுப்பினர்களை ஆணைக்குழு நியமித்தது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான உத்தியோகப்பூர்வ தீர்மானத்தை எதிர்வரும் 5ஆம் திகதி வெளியிட ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

தேர்தல் திகதி அறிவிக்கபபட்டு 14 அல்லது 17 நாட்களுக்குள் வேட்பு மனுத்தாக்கல் தொடர்பான வர்த்தமானி அறிவிக்கப்பட வேண்டும். இதற்கமைய இம்மாதம் மூன்றாம் வார பகுதியில் வேட்பு மனுத்தாக்கல் தொடர்பான அறிவிப்பு வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வேட்புமனுத்தாக்கல் தொடர்பான வர்த்தமானி வெளியிடப்பட்டு,5 அல்லது 7 வார காலத்திற்குள் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். இதற்கமைய உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி முதல், மார்ச் மாதம் 11 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்த தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு உத்தேசித்துள்ளது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்த உத்தரவிடக் கோரி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இரண்டு ரிட் மனுக்கள் வரும் 18 ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உள்ளூராட்சி தேர்தலுக்கு ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருமானால் வேட்புமனுத் தாக்கல் செய்யும் வகையில் பட்டியலைத் தயார் செய்யும் பணிகளில் ஈ.பி.டி.பி. கட்சி நேற்று முதல் ஆரம்பித்துள்ளது என்று நம்பகரமாக அறிய வந்தது.

இதற்காக ஒவ்வொரு சபையிலும் ஒவ்வொரு மூத்த உறுப்பினர்களிடம் பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டு, எந்த எந்த வட்டாரத்தில், எந்த உறுப்பினர் போட்டியிடுவது எனப் பட்டியல் தயாரிக்கும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய யாழில் உள்ள உள்ளூராட்சி சபைகள் சிலவற்றில் பட்டியல் தயாரிக்கும் பணி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டது.

இதேநேரம் இவ்வாறு தயாரிக்கப்படும் பட்டியலில் குடாநாட்டின் முக்கிய சபை ஒன்றில் தற்போது அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் சிலர் அடுத்த தேர்தலில் தாம் போட்டியிட விரும்பவில்லை அதனால் தமது பெயரை பட்டியலில் இணைக்க வேண்டாம் எனவும் தெரிவித்துள்ளனர் எனவும் கூறப்பட்டது.

## ஐஸ் போதைப்பொருள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் மீட்டனர். அந்தப் பொதியை சோதனை செய்த போது அதில் ஐஸ் போதைப்பொருள் காணப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டது.

சுமார் 95 கிராம் நிறையுடைய ஐஸ் போதைப்பொருள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக பேசாலை பொலிஸார் தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து பின் இருக்கையில் இருந்த பயணி ஒருவர் மற்றும் சாரதி, நடத்துனர் ஆகியோர் பேசாலை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

சுமார் 2 மணித்தியாலங்களின் பின் அவர்கள் விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டனர். இதனால் அந்த பஸ்ஸில் பயணித்த பயணிகள்பல்வேறுஅசௌகரியங்களுக்கு முகம் கொடுத்த நிலையில் தமது பயணத்தைத் தாமதமாகத் தொடர்ந்தனர்.

## குணபாலசிங்கம் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மொத்தமாக இடம்பெயர்ந்த மக்களை முழுமையாக சொந்த இடத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்பதற்காக அயராது பாடுபட்ட அ.குணபாலசிங்கம் தனது 77 ஆவது வயதில் சுகவீனம் காரணமாக மரணமடைந்துள்ளார்.

மயிலிட்டியைச் சொந்த இடமாக கொண்டவர் என்ற அடிப்படையில் மயிலிட்டி தொடர்பில் அதிக கரிசனையோடு காணப்பட்டார்.

இருந்தபோதும் ஏனைய அயல் கிராம மக்களும் தமது பூர்வீக இடங்களில் குடியமர மக்கள் போராட்டங்களில் அயராது முன்னின்று ஈடுபட்டு வதவர். அரசியல் தலைவர்களுடனான சந்திப்புக்கள் வரை மட்டுமன்றி சர்வதேச இராஜதந்திரிகள் வரையில் சந்தித்து ம்க்கள் நிலையை எடுத்துக் கூறியவர்.

இறுதியாக அண்மையில் குடாநாட்டிற்கு வருகை தந்த சர்வதேச நாடுகளின் 15 நாட்டு தூதுவர்களை வடக்கு மாகாண ஆளுநரின் அலுவலகத்தில் சந்தித்த போதும் தமது பிரதேச மீள் குடியேற்றத்திற்கும் அந்த மக்களின் வாழ்வாதாரத்திற்கும் வழி ஏற்படுத்தி தாருங்கள் எனக் கோரி நின்றவர்.

## மாகாணக் கல்வி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவனும் கல்வியல், பண்பாட்டியல், தமிழ் ஆகியவற்றின் முதுகலைமானி பட்டதாரியுமான இவர் 1986 முதல் 1988 வரை ஜனவரி வரை சென் பற்றிக்ஸ் கல்லூரியில் ஆசிரியராகவும், 1988 முதல் 1993 வரை கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலத்திலும் ஆசிரியராகவும், 1993 மற்றும் 1994 இல் பலாலி ஆசிரிய கலாசாலை மாணவனாகவும் இருந்தார்.

1995 முதல் 1998 வரை யாழ். சென் ஜேம்ஸ் மகா வித்தியாலய உப அதிபராகவும், 1999 முதல் 2009 வரை பலாலி ஆசிரிய கலாசாலையின் விரிவுரையாளராகவும் பணியாற்றினார்.

பின்னர் 2010, 2011இல் தீவக வலயத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும், பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் பணியாற்றி, 2012 முதல் 2014 ஆம் ஆண்டு ஜூன் வலையில் தீவக வலயக் கல்விப் பணிப்பாளராக பணிபுரிந்தார். 2014 ஜூலை முதல் 2016 செப்ரெம்பர் வரையில் மடுக் கல்விப் பணிப்பாளராகவும், 2017, 2018 ஆம் ஆண்டுகளில் கிளிநொச்சி கல்விப் பணிப்பாளராகவும், 2019ஆம் ஆண்டில் துணுக்காய், கிளிநெச்சி ஆகிய இரு வலயங்களின் வலயக் கல்விப் பணிப்பாளராகவும் செயற்பட்டார்.

2019ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் மேலதிக மகாண கல்விப் பணிப்பாளராக பணியாற்றிய நிலையில் இன்று 2023.01.01 முதல் மாகாண கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## மூன்றாவது மாதமாக ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீழ்ச்சியடைந்துள்ளது.

நவம்பரில் 61 சதவீதமாக காணப்பட்ட பணவீக்கம், டிசம்பரில் 57.2 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

இவ்வாறு பணவீக்கம் 4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதை தொடர்ந்து, உணவுப் பணவீக்கம் 9.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

நவம்பரில் 73.7 சதவீதமாக காணப்பட்ட உணவு பணவீக்கம், டிசம்பரில் 64.4 சதவீதமாக குறைவடைந்துள்ளது.

இதேவேளை நவம்பரில் 54.5 சதவீதமாக காணப்பட்ட உணவல்லா பணவீக்கம், டிசம்பரில் 53.4 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. 0.36 சதவீதமாக இருந்த உணவுப் பொருள்களின் விலைகளின் மாதாந்த வீழ்ச்சி இதற்கு பிரதானமாக பங்களித்ததாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.




# மரண அறிவித்தல்



## நடராசா சிவரட்ணம்

(ஓய்வு நிலை உதவிப் பொது முகாமையாளர், இலங்கை வங்கி, வடமாகாணம்.

பொதுமுகாமையாளர் V2 Travels & Tours (pvt) Ltd)

**மலர்வு** 25 02 1950 — **உதிர்வு** 28 12 2022

ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறையினைப் பிறப்பிடமாகவும் முருகையன் கோவிலடி, வல்வெட்டித்துறையினை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சிவரட்ணம் அவர்கள் 28.12.2022 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலம் சென்றவர்களான நடராசா வள்ளியம்மாள் தம்பதிகளின் புதல்வனும் காலம் சென்றவர்களான சிவலிங்கம் அருந்ததி தம்பதிகளின் மூத்த மருமகனும் நளினி (வசந்தி) அவர்களின் அன்புக் கணவரும் அமரர் தங்ககேஸ்வரி அம்மா, அமரர் குணரட்ணம், அமரர் தனரட்ணம், இராசரட்ணம், அரியரட்ணம், யோகரட்ணம், ஆகியோரின் அன்பு சகோதரனும், திருமதி பிரதீபா சசிகுமார் (ஆசிரியை), சாரூபன் சிவரட்ணம் (நிர்வாக இயக்குநர் V2 Travels மற்றும் கனடா குடி வரவு ஆலோசகர்), திருமதி காருண்யா மாதீபன் (முன்னாள் உதவி முகாமையாளர் - மக்கள் வங்கி) ஆகியோரின் அன்புத் தந்தையும் திரு வே.சசிகுமார், திருமதி சா.விசாந்தினி, திரு க.மாதீபன் ஆகியோரின் அன்பு மாமனாரும் மகிழினியா (அமரர்), அருள்சாயித்யன், அருந்ததி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

இவரது இறுதிக் கிரியைகள் 02.01.2023 (திங்கட் கிழமை) அன்று மதியம் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப 3.00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக மயிலியதனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல் - குடும்பத்தினர்.
(0772367407)

# நிலம் கையகப்படுத்துகின்ற புதிய திட்டம் வடக்கு, கிழக்கில் நிறுத்தப்பட வேண்டும்!

## முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் சபா குகதாஸ் கோரிக்கை

ஜனாதிபதி ரணில் அரசாங்கம் பயிர் செய்கை செய்யப்படாத நிலங்களை அரச உடைமையாகக் கையகப்படுத்தும் புதிய வடிவிலான நில அபகரிப்பு நடவடிக்கையை முன்னெடுக்க ஆரம்பித்துள்ளது.

அதன் முதற்கட்டமாக வடக்கு மாகாணம் உட்பட பதுளை, குருணாகல் மாவட்டங்களில் நிலம் கையகப்படுத்தப்பட உள்ளதாக செய்திகள் வந்துள்ளன என வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

வடக்கு கிழக்கு மாகாணங்களைப் பொறுத்த வரையில் கடந்த 30 ஆண்டு போர் காரணமாக லட்சக் கணக்கான தமிழ் மக்கள் நாட்டை விட்டு வெளியேறி வேறு தேசங்களில் வசிப்பதால் அவர்களுக்கு சொந்தமான பெரும் தொகையான பயிர்ச் செய்கை நிலங்கள் தரிசு நிலங்களாக மாறியுள்ளன.

அதனை அவர்கள் பயன்படுத்த ஒரு நிலையான அரசியல் தீர்வு மிக அவசியமானது. ஆகவே இனப் பிரச்சினைக்கான தீர்வை முன்னெடுப்பதைத் தவிர்த்து நிலத்தை கையகப்படுத்தல் புதிய வடிவிலான இன அழிப்பாகவே மாறியுள்ளது. இத்தகைய செயற்பாடுகளை வடக்கு கிழக்கு மாகாணங்களில் அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும்.

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் 14 ஆயிரம் ஏக்கர் காணி அபகரிக்கப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது நிறுத்தப்பட வேண்டும். வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிரந்தர அரசியல் தீர்வு உறுதிப்படுத்தப்படும் வரை பயிர்ச்செய்கை நிலங்களைக் கையகப்படுத்தல் மற்றும் அரச திணைக்களங்கள் மூலமாக நிலத்தை அபகரிக்கும் செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும்.

அத்தோடு வடக்கு கிழக்கில் மாகாணத்துக்குச் சொந்தமான அரச காணிகள் வடக்கு கிழக்கில் வாழும் மக்களில் சொந்தக் காணி இல்லாதவர்களுக்கும் தொழில் வாய்ப்பு இல்லாது ஆயிரக்கணக்காக



தொழில் தேடி அலையும் இளையோருக்கும் வழங்கப்பட வேண்டும். எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தினேஷ் ஷாப்டர் படுகொலையுண்டமை; மெலிந்த, உயரமான அந்த நபர் யார்?



படுகொலை செய்யப்பட்டுள்ளார் என நம்பப்படும் பிரபல வர்த்தகர் தினேஷ் ஷாப்டர் விவகாரத்தில், நபர் ஒருவரை அடையாளம் காண சிறப்பு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சி.ஐ.டி. பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரசாத் ரணசிங்கவின் மேற்பார்வையில், கிருலப்பனையில் அமைந்துள்ள பாதாள உலக குழுக்கள் மற்றும் மனிதப் படுகொலைகள் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுக்கும் சிறப்பு பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஹேமால் பிரஷாந்தவின் ஆலோசனையின் கீழ் இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் இடம்பெறும் நிலையில், வாக்கு மூலம் ஒன்றின் அடிப்படையில் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஷாப்டர், பொரளை பொது மயானத்தில் அவரது காருக்குள் குற்றுயிராய் கிடந்த போது, அந்த கார் அருகே இருந்து சந்தேகத்துக்கு உரிய ஒருவர் சென்றார் எனவும், மயானத்தின் ஊழியர் ஒருவர் வாக்கு மூலம் அளித்துள்ளார்.

அவரது வாக்கு மூலத்தின் பிரகாரம் மெல்லிய, உயரமான தோற்றத்தை உடைய ஒருவர் இவ்வாறு சென்றார் எனக் கூறப்படும் நிலையில், அந்த நபரை அடையாளம் காண தற்போது சிறப்பு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அறிய முடிகின்றது.

இதனிடையே, தினேஷ் ஷாப்டரின் படுகொலை தொடர்பில் இதுவரை 90 பேரின் வாக்கு மூலங்களை விசாரணையாளர்கள் பதிவு செய்துள்ளனர் என சி.ஐ.டி. தகவல்கள் தெரிவித்தன.

அதன்படி தற்போது வரையான விசாரணையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள விடயங்களை மையப்படுத்தி முக்கிய 4 கோணங்களில் விசாரணைகள் தொடர்கின்றன என அறிய முடிகின்றது.

இதற்காக சி.ஐ.டி. பிரதிப் பொலிஸ் மா அதிபரின் கீழ் 8 சி.ஐ.டி. சிறப்புக் குழுக்கள் 24 மணி நேரமும் களத்தில் இறக்கப்பட்டுள்ளன.

இதனைவிட பொலிஸ் மற்றும் தேசிய உளவுச் சேவையின் அறிக்கைகளையும் விசாரணையாளர்கள் பெற்று, சந்தேகிக்கத்தக்க அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் அவதானம் செலுத்தியுள்ளதாக அறிய முடிகின்றது.

# அரசாங்கத்தின் சரியான தீர்மானங்களால் பொருளாதாரம் ஸ்திரத்தன்மை அடைகிறது!

## ஷெஹான் சேமசிங்க பெருமிதம்



அரசாங்கம் எடுக்கும் தீர்மானங்களால் பொருளாதாரம் படிப்படியாக ஸ்திரத்தன்மை அடைந்து வருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட சவாலான தீர்மானங்கள் காரணமாக இலங்கையின் பொருளாதாரம் ஸ்திரத்தன்மையை நோக்கிச் செல்வதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாதங்களில் பணவீக்கம் குறைந்திருப்பது பொருளாதாரம் சரியான திசையில் சென்று கொண்டிருப்பதற்கான அறிகுறி என்றும் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். நவம்பரில் 61.0 சதவீதமாக இருந்த பணவீக்கம் டிசெம்பரில் 57.2 சதவீதமாக வும் உணவுப் பணவீக்கம் நவம்பரில் 73.7 சதவீதத்திலிருந்து டிசெம்பரில் 64.4 சதவீதமாகக் குறைந்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதேவேளை 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து நிவாஸரணம் கிடைக்கும் என எதிர்பார்ப்பதாகவும் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

# சங்கானை பல நோக்கு கூட்டுறவு சங்க நலன்புரி நிதியம் அங்குரார்ப்பண நிகழ்வு!



சங்கானை பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் நலன் புரிநிதியம் அங்குரார்ப் பணம் செய்யப்பட்டுள்ளது.

நேற்று (சனிக்கிழமை) சங்கானை பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைவர் ப.கேசவதாசன் அவர்களது தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

குறித்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.இ.விஜயமோகனராசா கலந்து கொண்டிருந்தார்.

இதன்போது புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த.சாதாரணதரப் பரீட்சை க.பொ.த. உயர்தரப் பரீட்சை போன்ற பரீட்சைகளில் சித்தி எய்திய கூட்டுறவு பணியாளர்களின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# அரசின் முயற்சிக்கு நீதிமன்று இடமளித்து விடக் கூடாது!

## என்கின்றார் லக்ஷ்மன் கிரியெல்ல

அரசாங்கம் தேர்தலை காலம் தாழ்த்துவதற்கு முயற்சிக்குமானால் அதனைத் தடுத்து நீதிமன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி கேட்டுக்கொண்டுள்ளது.உள்ளூராட்சி மன்றங்கள் காலாவதியாகிவிட்ட நிலையில் விரைவில் புதிய ஆட்சி உருவாக தேர்தல் நடைபெற வேண்டும் என அந்தக் கட்சியின் உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார். தேர்தலைக் காலம் தாழ்த்துவதற்கு தீர்மானித்தன் பின்னர், நீதிமன்றம் அதற்கு முரணான தீர்ப்பை வழங்கினால் அரசாங்கம் படுதோல்வியடையும் என்றும் குறிப்பிட்டார்.புதிய உள்ளூராட்சி மன்றங்களும் புதிய நாடாளுமன்றமும் தெரிவு செய்யப்பட்டு சர்வதேசத்துடன் தொடர்புகளைப் பேண முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கத்தின் மீது சர்வதேசத்துக்கு நம்பிக்கையில்லாத இந்தச் சந்தர்ப்பத்தில் உள்ளூராட்சித் தேர்தலுக்கு பின்னர் பொதுத்தேர்தலை நடத்த வேண்டும் என லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

# தேங்காய் எண்ணெய் மூலப்பொருள் செலவை சுமக்க வேண்டியுள்ளது!

## தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் வேதனை

சந்தையில் கொப்பரையின் விலை அதிகரித்துள்ளதால், உள்ளூர் தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர் என உள்ளூர் தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெயின் தரம் தொடர்பாக எந்தக் கட்டுப்பாடும் இல்லை என்றும், தேவையான மூலப்பொருள்களுக்கு பெரும் செலவை சுமக்க வேண்டியுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாகத் தமது வாடிக்கையாளர்கள் பெருமளவு குறைந்துள்ளனர் எனவும், தற்போதைய மின்சார விநியோகத் தடை, மின்கட்டண அதிகரிப்பு என்பனவும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# வர்த்தகம் மூலம் அண்டை நாடுகளுடன் உறவுகளை வலுப்படுத்த அரசு திட்டம்!

இந்தியா, சீனா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதற்கான முன்மொழிவுகள் இராஜதந்திர மட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன.

பல நாடுகளுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு இலங்கை அரசாங்கம் முன்வைத்த பிரேரணைக்கு தாய்லாந்து மட்டுமே விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளது.

இதன்படி, சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பில் தாய்லாந்து அரசாங்கத்தின் தலைவர்களுடன் ஜனவரி 8 மற்றும் 9 ஆம் திகதிகளில் கலந்துரையாடப்படவுள்ளது.இதற்காக தாய்லாந்துக்கு அதிகாரிகள் விஜயம் மேற்கொள்ளவுள்ளனர் எனவும் அரசாங்கத்தின் உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் கடந்த அரசாங்கத்தின் போது பங்களாதேஸுடன் ஆரம்பித்த பேச்சைத் தொடர்ந்தும் முன்னெடுக்கவும் இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.01.2023இல் வெளியிடப்பெற்றது.